www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

வெளியீடு: 38 | 01 ஐப்பசி 1997 | விலை: ரூபா 7.00

# அரசு புலிகள் பேச்சுவார்த்தை

**அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்படும் அதேவேளை புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாகவும் பரவலாகக் கதைகள் அடிபட ஆரம்பித்துள்ளன.**




வடகிழக்கில் பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்பொன்றினூடாக விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கான ஓர் செய்தியை அனுப்பியுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது. அதன் பின்னரே, கொழும்பிலும் மலேசியாவிலும் புலிகளுடன் பேசுவது தொடர்பான சில கருத்துக்களை ஜனாதிபதி அவர்கள் வெளியிட்டார்.

சிறீலங்கா அரசின் தொடர்ச்சியான இராணுவத் தாக்குதல்கள், வடமாகாணத்தில் ஓர் அரசாங்கத்தை நடத்தியவர்கள் அதனை முழுமையாகப் பறிகொடுத்த நிலைமை, புலிகளின் பிரதேசத்திலிருந்த மக்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறி, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம், மன்னாருக்குப் போகும் நிலைமை, தேவைக்கு மேலதிகமான ஆயுதங்கள் இருந்தும், இயக்கத்தில் சேரும் இளைஞர், யுவதிகளின் விகிதாசாரம் மிகவும் கீழ்மட்டத்திற்கு வந்துள்ளமை, மருத்துவம் மற்றும் வசதிகள் மிகவும் குறைந்துள்ள சூழ்நிலை.... இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில் உள்ள புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

இதனைப் போன்றே அரசின் பக்கத்திலும் புலிகளுடன் பேசவேண்டிய தேவைகள் பல உள்ளன. முதலாவதாக சர்வதேச நெருக்குதல்கள், 'ஜெயசிக்குறு'யுத்தம் தேக்க நிலையை அடைந்துள்ள தன்மை, மாதக்கணக்கில் புளியங்குளத்தை விட்டு வெளியேற முடியாத நிலையிலும், திரும்பி வரமுடியாத நிலையிலும் உள்ள சிறீலங்கா இராணுவம் – இதிலும் முக்கியமாக வடகிழக்கு மழைக்கான பருவகாலம் தொடங்க இருப்பதால், இராணுவம் இன்னும் பல கஷ்டங்களைச் சந்திக்க நேரும்.

மட்டக்களப்பிலும் புலிகளின் சிறுசிறு தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவற்றைவிட "புலிகளுடன் பேசி உருவாக்கப்படாத தீர்வுத்திட்டத்தால் எந்தவித பிரயோசனமும் இல்லை. பாராளுமன்றத்தில் இதனை நாம் ஆதரித்தாலும் புலிகள் யுத்தத்தை தொடரத்தானே செய்வார்கள். அப்படியாயின் இத்தீர்வுத்திட்டத்தால் என்ன பிரயோசனம்?" என்ற கேள்வியை ஐ.தே.க. கேட்கின்றது.

அதுமாத்திரமல்லாமல், புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கினால், ஆறு மாதமோ ஒரு வருடமோ அதில் இழுபட்டுப் போகும். ஆகவே ஐ.தே.க. வும் பெரியளவில் எதனையும் Comit பண்ண வேண்டிய தேவை இருக்காது. இக்கள்ளக் குணத்தாலேயே புலிகளுடன் பேசும்படி ஐ.தே.க. வற்புறுத்துகின்றது.

இப்படியான பல தேவைகளால் புலிகளுடன் பேசவேண்டியதேவை அரசுக்கும் உள்ளது.

மொத்தத்தில் புலிகளுக்கும், அரசுக்கும் பேச வேண்டிய தேவைகள் உள்ளன. ஆனால், இப்பேச்சுவார்த்தைகள் நேர்மையானதாக இருக்குமா என்பதுதான் முக்கியமான கேள்வியாகும். கடந்த காலத்தில் நடந்த பல பேச்சுவார்த்தைகள் உண்மையாக, நேர்மையாக இல்லாமல் வெறும் தந்திரோபாய ரீதியில் கையாளப்பட்டது என்பதே உண்மை. இதேநிலை எதிர்காலத்தில் வரக்கூடிய பேச்சுவார்த்தைக்கும் ஏற்படுமா என்பது முக்கியமான கேள்வியாகும்.

ஏனெனில் இன்னுமொருமுறை அரசு–புலிகள் பேச்சுவர்த்தை ஏற்பட்டு அது ஆறு மாதத்திலோ ஒரு வருடத்திலோ முறிவடையுமென்றால், மீண்டும் ஓர் தீர்வு ஏற்பட இன்னும் பத்து வருடமாகலாம். எனவேதான் பேச்சுவார்த்தை என்பது இருபக்கத்திலும் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும் என விரும்புகின்றோம்.

நிர்ப்பந்தங்கள் ஏற்படுவதால் பேசுவது என்பதை விடுத்து, பேசித் தீர்வு காணவேண்டும் என்ற சங்கல்பம் முதலில் ஏற்படவேண்டும். யுத்தத்தின் மூலம் தனிநாடு காணமுடியாது என்பதை புலிகளும், யுத்தத்தின்மூலம் சமாதானம் காண முடியாது என்பதை அரசாங்கமும் புரிந்துகொண்டால் மாத்திரமே நேர்மையான பேச்சுவார்த்தைகள் ஏற்பட முடியும்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தாம் சமாதானத்திற்காக இருப்பதாகவும், ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைத்த முதலாவது அரசாங்கம் என்றஅடிப்படையில், சர்வதேசஅபிமானத்தைப் பெற்றுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அத்துடன் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போகும் பொழுது முன்னரைப் போல் இல்லாமல், அரசு தன் கைவசம் உள்ள தீர்வுத் திட்டத்தை முன்வைக்கலாம். இத்தீர்வுத் திட்டத்தை புலிகள் முற்றாக நிராகரிக்கப் போகின்றனவா? அல்லது அதனடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் போகின்றனவா? என்பது முக்கியமான கேள்வியாகும்.

முற்றுமுழுதாக அது நிராகரிக்கப்பட்டால், தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்றாக ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அப்படியில்லாது குழம்பும் நிலை ஏற்பட்டால் மீண்டும் புலிகளே சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படுவர்.

அப்படியில்லையேல், அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தை இன்னும் செழுமைப்படுத்தும்படி புலிகள் கோரலாம்.

ஆனால் இன்றைய தீர்வுத் திட்டமானது ஒற்றையாட்சி முறையை அகற்றுதல், சட்டவாக்கும் உரிமைகளை பிராந்திய சபைகளுக்கு வழங்குதல் என்ற அடிப்படையில் முன்னேற்றகரமாக இருந்தாலும், அதிகாரங்கள் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அலகு தொடர்பாகவும் இன்னும் முழுமையான தீர்மானம் இல்லை:

இந்நிலையில் நேர்மையான ஓர் பேச்சுவார்த்தையில் புலிகள் ஈடுபடுவார்களாக இருந்தால் மிக அதிகமான அதிகாரங்களுடன்கூடிய ஓர் சமஷ்டி ஆட்சி முறையைக் கூட புலிகள் கோரலாம். புலிகளின் அக்கோரிக்கைக்கு நிச்சயமாக சர்வதேச ஆதரவும் கிடைக்கும்.

புலிகள் அதனைச் செய்யப்போகின்றார்களா? இல்லையேல் இந்தப் பேச்சுவார்த்தையையும் ஆயுதப்போராட்டத்தை வலுப்படுத்துவதற்கான தந்திரோபாயமாக மேற்கொள்ளப் போகின்றார்களா?

தமிழர் விடுதலைக் கூட்டணியை அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி. (E.P.D.P.), புளொட் (P.L.O.T.E.) போன்ற கட்சிகளைப் பொறுத்தவரையில், இத்தீர்வுத் திட்டத்தில் மாற்றங்களை உருவாக்கும் வல்லமை அல்லது அதற்கான அழுத்தத்தை அரசுக்கு கொடுக்கும் வல்லமை அவர்களுக்கு இல்லை.

(தொடர்ச்சி 9 பக்கம்)


ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

## சிங்களக் கமிஷன் அறிக்கையைக் கண்டித்து கண்டனப் பேரணி

சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி அறிக்கை தயாரிக்க, பௌத்த மதபீடங்களால் நியமிக்கப்பட்ட சிங்களக் கமிஷன் தனது அறிக்கையினை வெளியிட்டுள்ளது. மீண்டும் இந்த நாட்டில் இனவாத அலையை விசிறி விடும்படியாகவே இந்த அறிக்கை அமைந்துள்ளது.

ஒற்றையாட்சி முறை மாற்றப்படக் கூடாது....

வட–கிழக்கிற்கு சட்டம் ஒழுங்கு, காணிப் பங்கீடு போன்ற அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது....

இது ஓர் சிங்கள பௌத்த நாடு என்பதை சகல சிறுபான்மை இனங்களும் ஏற்றுக்கொண்டால் இந்த நாட்டில் பிரச்சினை எதுவும் இருக்காது....

என்பது போன்ற இனவாத நஞ்சைக் கக்கியுள்ளது இவ்வறிக்கை. அரசியல் தீர்வை எதிர்த்து, யுத்தம் தொடர்வதை வரவேற்கும் இந்த அறிக்கையைக் கண்டித்தும், இந்த இனவாத அலைக்கு அடிபணிந்து போகாமல், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை நடைமுறைப்படுத்துவதில் அரசு பின்னிற்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும் வடக்கு கிழக்கில் கண்டனப் பேரணிகளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடத்தவிருக்கிறது. முதற்கட்டமாக எதிர்வரும் 14ந் திகதி (14.10.97. செவ்வாய்க்கிழமை) வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் ஒரேசமயத்தில் கண்டனப் பேரணிகள் நடைபெறுகிறது.


படிப்பகம்

# கண்ணோட்டம்

## தழும்பில்லாத அடி

கண்கள் இரண்டு என்பதற்காக ஒரே நேரத்தில் இரண்டு காட்சிகளைக் காணமுடியாது. செவிகள் இரண்டு என்பதற்காக வெவ்வேறான இரு செய்திகளை ஒரே நேரத்தில் செவிமடுக்க முடியாது. கைகள் இரண்டு என்பதற்காக கருமம் இரண்டை ஒரே நேரத்தில் ஆற்ற முடியாது. கால்கள் இரண்டு என்பதற்காக வெவ்வேறு திசைகளில் பயணிக்க முடியாது. இது இயற்கையின் விதி. இதனை எவரும் மறுக்க மாட்டார்கள்.

இதேபோலவே ஒரே காட்சியைக் காண்பதற்கு ஒரு கண்ணே போதுமென்றோ, ஒரு கருமத்தை ஆற்ற ஒரே கையே போதுமென்றோ, கால்களில் ஒன்று மட்டும் காணும் என்றோ எவரும் கூறிவிட மாட்டார்கள்.

வெவ்வேறான உறுப்புக்கள் இணைந்து செயற்படுவது தான் ஒற்றுமை. போர்முனையில் துப்பாக்கியின் விசையை அழுத்த ஒரு விரல் போதுமானதாக இருக்கலாம். ஆனால் இலக்கை நோக்கி ரவையைச் செலுத்துவதற்கு உடம்பின் ஒவ்வொரு அங்கமும் ஒற்றுமையாக – ஒத்த சிந்தனையுடன் செயற்படுவது அவசியமானதாகும் என்பதை மறுக்க முடியாது.

ஒவ்வொருவரினதும் தனித்துவத்தையும், இயல்புகளில் இருக்கக்கூடிய வேறுபாடுகளையும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் போதுதான் சமூகத்தில் ஒற்றுமையும் ஐக்கியமும் துளிர் விடக் கூடும். அது இல்லாதபோது பிரிவினைதான் வளரும். வேறுபாடுகளால் வேற்றுமைகள் வளர இடைவெளிகள்தான் அதிகமாகும்.

நான் என்ற சுயநல சிந்தனையிலிருந்து விடுபட்டு நாம், நாங்கள் என்று பரந்துபட்டுச் சிந்திக்கும்போது, தனிமனிதன் என்ற நிலையிலிருந்து சமூகம் என்று எண்ணும் நிலைக்கு உயர்த்தப்படுகின்றோம். பல்வேறு சமூகங்களாகச் சேர்ந்த போதும் பொதுவான மொழி, பொதுவான வாழ்க்கை முறை, பொதுவான பண்பாடு, பொதுவில் தொடர்ச்சியான நிலப்பரப்பு என்பவற்றைக் கொண்ட மக்கள் கூட்டம் இனம் என்றாகிறது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த போதும் ஒரு அரசின் இறைமைக்கு உட்பட்டு வாழும் மக்கள் ஒரு தேசத்தவர் ஆகின்றனர்.

எனவேதான், 'ஒரே தேசம்' என்பது எப்போதும் ஒரே மக்கள் தொகுதியைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று கூறமுடியாது. உதாரணமாக, மொழிவாரி மாநிலமாக அமைந்த ஆட்சிமுறையும், ஒவ்வொருவரும் தத்தம் பண்பாடுகளை–கலாசார மரபுகளை–அடையாளங்களைப் பேணும் நெகிழ்ச்சித் தன்மையும் அடிப்படையில் உத்தரவாதப்படுத்தப்பட்டிருப்பதால், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைவரும் இந்தியர்கள் எனப் பெருமை கொள்கின்றனர். இந்தியன் என்று கருதுவதிலும், எண்பது கோடி மக்களில் நானும் ஒருவன் என்று உணர்வதிலும் அவர்கள் பெருமை கொள்கின்றனர்.

ஆனால் 'நாம் இலங்கையர்' என்ற ஒருமைப்பட்ட உணர்வு தோன்றுவதற்கு இங்கு தடைக்கற்கள் பலவுண்டு. குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இலங்கையர் என்ற உணர்வுக்குள், அன்பான அரவணைப்புக்குப் பதிலாக "நீ தமிழன்" என்று முத்திரை குத்தி அடிமைப்படுத்தும் செயற்பாடுகளே இதுகாலவரை அரசியலரங்கின் செயற்பாடுகளாக இருந்துள்ளன. இதனால்தான் 'தமிழர்கள்' என்றுகூறித் தலைநிமிர்த்த வேண்டிய அவசியம் தமிழர்களுக்கு ஏற்பட்டது.

இந்த அடிப்படையை ஏற்க மறுத்து, 'ஒரே மக்கள்' எனக் கோஷம் எழுப்புவது தமிழர் மத்தியில், அவர்களது அடையாளச் சின்னத்தை அழிக்கும் எத்தனமாகவே கருதப்பட்டுவிடும். எனவேதான் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர், மலையகத்தார் எனப் பல்வேறு மக்களும் ஒருங்கிணைந்து இலங்கையர்களாக ஐக்கியப்பட்டு நிற்போம் என ஆட்சியாளர்கள் உணர்த்த முற்பட வேண்டும். அதில்லாமல், 'ஒரே தேசம், ஒரே மக்கள்' என்று முழக்கமிடுவதால் ஐக்கிய உணர்வு பூத்துவிடப் போவதில்லை என்பதைக் காலம் நிரூபிக்கும்.

வேற்றுமைக்குள் ஒற்றுமை கண்டு ஐக்கியம் மலர்வதற்கு பாடுபடுவதன் மூலமே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டுணர்வையும் வளர்த்துக் கொள்ள முடியும். வேற்றுமைகளை அங்கீகரிக்க மறுத்து ஒற்றுமைச் சாயம் பூசுவது, தனித்துவத்தைச் சிதைக்கும் எத்தனமாகவே கருதப்படும் ஆபத்து உண்டு.

மொழி, கலாசார, பாரம்பரிய வேறுபாடுகளை அங்கீகரித்து, இவற்றுக்கான அடிப்படை உத்தரவாதம் நிலைத்திருக்கும் போது வேற்றுமைகளால் அந்நியப்பட்டுப் போகும் நிலை அறவே ஒழியும். அதில்லாதவிடத்து, "ஒரே தேசம் ஒரே மக்கள்" என்ற கோஷம் சந்திரிகாவின் மொழியில் விஜயதுங்காவின் கருத்து என்றே அர்த்தப்படுத்தப்படும்.

# எதிரிகளின் பாசறையைத் தேடிச் செல்கிறோம் தமிழீழ மண்ணை மீட்க ஓடிச் செல்கிறோம்

– புதுவை இரத்தினதுரை



"அம்மாவும் தங்கைச்சியும் வன்னியிலை, அப்பாவும் அக்கா குடும்பமும் யாழ்ப்பாணத்திலை, நானும் தம்பியும் கொழும்பில.... எங்கட குடும்பம் திக்குக்கு ஒண்டாய்ச் சிதறிப் போச்சு. இனி எப்பதான் ஒண்டாய்ச் சேருவமோ தெரியாது...."

கொழும்பு காலி வீதியில் யாழ்ப்பாணம் போவதற்காக விமானச் சீட்டு பெறுவதற்கு முண்டியடிக்கும் மக்கள் கூட்டத்தில் ஒருவராக நின்றிருந்த சண்முகராசா வெளியிட்ட ஆதங்கம் இது. சண்முகராசாவுக்கு மட்டுமல்ல, சாதாரண தமிழ்க் குடும்பம் ஒவ்வொன்றினதும் இப்போதைய ஏக்கம் இப்படித்தான் இருக்கிறது.

இரண்டாம் ஈழப்போர், மூன்றாம் ஈழப்போர் என பெயர் சூட்டித் தொடரும் யுத்தங்களால் குடும்ப உறவுகள் குலைக்கப்பட்டு, அகதிகளாகி, அவல வாழ்வுக்கு உட்பட்டு நிற்கும் மக்களின் வேதனை முனகல்கள் விண்ணை முட்டுமளவுக்குப் பெருகியுள்ளது. மக்களின் இந்த அவல நிலை பற்றிய அக்கறைகள் எதுவுமில்லாமல் மூன்றாண்டு காலமாக நீடிக்கும் போர்முனையில் ஈட்டப்பட்ட 'வெற்றிகள்', நிலைநாட்டப்பட்ட 'சாதனைகள்', வீழ்த்தப்பட்ட விமானங்கள், கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், கொல்லப்பட்ட படையினர் என்று வகைவகையாக கணக்குக் காட்டி வீரப்பிரதாபம் பேசுவதிலேயே விடுதலைப் புலிகள் நாட்டம் கொண்டிருக்கின்றனர். இதன்மூலம் இராணுவ ரீதியாகத் தொடர்ந்து போரிடுவதன் வாயிலாக படையினரைத் தொல்லைக்கு உள்ளாக்கி வெற்றியைச் சம்பாதித்து விடலாம் என்பதே அவர்கள் சொல்லும் செய்தியாக உள்ளது. ஆனால் நிலைமை அவ்வாறாக இல்லை என்பதையே நடைமுறைகள் காட்டுகின்றன.

### மூன்றாண்டுகள் நீடிக்கும் போரும் மக்கள் மனோநிலையும்

மூன்றாண்டுகளுக்கு முன்பு பூநகரி முகாமை முற்றாக மூடி, மக்கள் போக்குவரத்துக்கான தரைப்பாதை திறக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பேச்சுவார்த்தை மேசையிலிருந்து புலிகள்தான் இப்போது போக்குவரத்துப் பாதையில் முட்டுக்கட்டையாக நிற்கின்றனர். இது விந்தையானதொரு முரண்பாடு.

கோட்டை, கொக்காவில், மாங்குளம், கொண்டைச்சி என்று படையினர் முகாம்களைத் தேடிப் போய்த் தாக்கிய நிலை முற்றாக மாறிப்போக, இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக செயற்பட வேண்டிய இக்கட்டான நிலை புலிகளுக்கு வாய்த்துள்ளது. படையினரை வலுச் சண்டைக்கு இழுத்து மோதிய, மரபு வழியானதொரு படையணியைப் போல பெற்ற பரிமாணம் மறைந்து, தொந்தரவுகளை மட்டுமே கொடுக்கக் கூடிய நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனாலேயே மின்மாற்றிகள் போன்றவையும் இராணுவ இலக்குகளாகத் தெரிவு செய்யப்பட வேண்டிய தேவை உருவாகியுள்ளது. மேலும், படை முகாம் மீதான தாக்குதல்கள் என்ற எல்லை மீறி, பொதுமக்கள் குடியிருப்புகள் மீதும் புலிகளின் எறிகணைகள் விழுந்து வெடிக்குமளவுக்கு மாறியிருக்கும் சூழ்நிலையானது மக்களை வெறுப்பும் விரக்தியும் கொள்ளச் செய்துள்ளது.

கட்டிய துணியுடன் கைதடியை வந்தடைந்த போதும்கூட வலிகாமத்து மக்களிடம் நம்பிக்கை மேலோங்கியிருந்தது உண்மை. "பெடியள் விடமாட்டாங்கள்.... எந்னவோ செய்யப் போறாங்கள்...." என்று உதடுகள் உச்சரிக்க வேகமாக நடந்து தென்மராட்சியைச் சென்றடைந்த போதும், புலிகளின் 'வீரத்தில்' சந்தேகம் தோன்றியிருக்கவில்லை. "வன்னிக்கு முந்துங்கள்" எனக் கூறப்பட்ட போதும், ஆபத்து நிறைந்த கிளாலிக் கடலைக் கடந்து போகவும் அவர்கள் தயக்கம் காட்டிடவில்லை. ஆனால், இந்த நிலைமைகள் இப்போது இல்லை என்பதே உண்மையாகும். குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்பவர்களும், நீண்ட தூரப் பயணத்தின் பின்னர் உயிலங்குளம் பாதை வழியாக வருபவர்களும் தமது செயற்பாடுகள் மூலம் உணர்த்தும் செய்தி இதுதான்: "பட முடியாது, இனித் துயரம்..." எனவேதான் வருவது வரட்டும் என்ற அசட்டுத் துணிச்சலுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வருகின்றனர்.

ஆக, மூன்னாண்டுகள் நீடிக்கும் யுத்தமானது, சாதாரண தமிழ் மக்கள் ஒவ்வொருவரையும் நேரடியாகப் பாதித்துள்ளது. ஒவ்வொரு தனிமனிதனும் கூட ஏதோவொரு இழப்புக்கு உட்பட்டு, வேதனையில் வாடிவதங்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

தனிமனிதர்களின் இத்தகைய மனோநிலைக்கு முன்பாக போர்முனையில் விடுதலைப் புலிகள் பெற்ற வெற்றிகளும், ஈட்டிய சாதனைகளும் வெறும் நீர்க்குமிழிகள் போலத்தான் இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் வெற்றிகள் குறித்துப் புளகாங்கிதம் அடைவதற்குறப் பதிலாக "இப்போதைக்குத் தீராது போல" என்ற விரக்தியும் வெறுப்பும் கலந்த குரல்தான் மக்கள் மத்தியிலிருந்து வெளிப்படுகின்றது

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

29A. வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

22. வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

மன்னார்.
☎ 023-2370

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

54. மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 2258

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...

அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

பாரிய இழப்புகளுக்கு மத்தியில் வவுனியா–கிளிநொச்சிப் பாதையை திறப்பதற்கான அரசு–புலிகள் யுத்தம் நடைபெற்று வருகிறது. 100 நாட்களின் பின்னர், 600க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 3500 இராணுவத்தினர் காயம்பட்டும், புளியங்குளத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக இராணுவத் தரப்பு கூறுகின்றது. புலிகளின் தரப்பிலும் ஏறத்தாழ இதேயளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அங்கிருந்து வரும் மக்கள் கூறுகின்றார்கள்.

ளோ, குண்டு வீச்சுக்கும், ஷெல் வீச்சுக்கும் பயந்து நாளாந்தம் ஓடியவண்ணமே உள்ளனர்.

மறுபக்கத்தில் மட்டக்களப்பில் தமது இருப்பைக் காட்ட அங்கும் புலிகளின் ஷெல் அடி. வெல்ல முடியாத யுத்தத்தில் இந்த இழப்புக்கள் எல்லாம் தேவைதானா என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது?

அன்பிற்கினிய மக்களே!

போராட்டம் பல முனைகளைக்கொண்டது. ஆனால், புலிகளைப் பொறுத்தவரை எல்லா முனைகளிலுமே தோல்வியைத்தான் தழுவி வருகின்றார்கள்.

ஒருநாட் [illegible] யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதன் மூலம் சிறீலங்கா அரசை பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கலாம் அல்லது என்ன வரையறைக்குள் பேசத் தயார் என்பதை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தலாம்.

இவ்வாறான முயற்சிகள், அரசுக்கு பல்வேறுபட்ட இடங்களில் இருந்தும் நிர்ப்பந்தங்களையும் அழுத்தங்களையும் உருவாக்க உதவியாக இருக்கும்.

இதனைவிடுத்து, ஏட்டிக்குப் போட்டியான போர்ப் பிரகடனங்கள் அழிவுக்கே இட்டுச் செல்லும். ஓர் ஆங்கிலப் பத்திரிகை எழுதியது



## கத்தியைத் தீட்டாமல் புத்தியைத் தீட்ட வேண்டிய கால்கட்டமிது

மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்கள் மீது ஷெல் அடிப்பது, விமானக் குண்டுவீச்சுக்களை நடத்துவது எல்லாம் அரச படைகள் நடத்தும் அட்டகாசமாகவே முன்னர் கருதப்பட்டது. ஆனால், ஏட்டிக்குப் போட்டியாக புலிகள் நடத்தும் ஷெல் அடியில் அப்பாவித் தமிழ் மக்கள் சாவதும் சாதாரண நிகழ்வாகி வருகின்றது.

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது புலிகள் நடத்திய 'செய் அல்லது செத்துமடி' தாக்குதலில் சமயபுரம், கணேசபுரம் போன்ற வவுனியாக் கிராமங்களில் ஷெல் விழுந்து பல அப்பாவிகள் காயமடைந்தார்கள், பலர் கொல்லப்பட்டார்கள்.

இப்பொழுது கன்னன்குடாவிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு நடத்திய ஆட்டிலறித் தாக்குதலில் சிறுவர்கள் கொல்லப்பட்டும், 19க்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துமுள்ளனர். இதற்கு முன்னரும் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு இராணுவ முகாம் தாக்குதலில்,

முதலாவதாக, எமது பின்புலமான இந்தியாவைப் பகைத்து அவர்களின் நட்பை இழந்தார்கள். அநியாயக் கொலைகளால், விடுதலை வீரர்கள் என்பதற்கு மாறாக சர்வதேசப் பயங்கரவாதிகள் எனப் பெயர் பெற்றனர். இன்று பெருமளவு பொதுமக்களிடமும் எதிர்ப்பை சம்பாதித்துள்ளனர். இறுதியாக, தமது கட்டுப்பாட்டில் இருந்த பல பிரதேசங்களையும் இழந்து இராணுவ ரீதியிலும் பலவீனமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் தொடர்ந்து யுத்தத்தைப் புரிவது தமிழ்மக்களுக்கும் சரி, புலிகளுக்கும் சரி சாதகமானதா என்பதை ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது?

புலிகள் பேசுவதற்கு தயாராக இருக்கிறார்கள்; அரசுதான் யுத்தத்தை நடத்துகின்றது என யாராவது சொல்லக் கூடும். அது உண்மையும் கூட. ஆனால், புலிகள் உண்மையாகவே யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை என்பவற்றில் அக்கறை உள்ளவர்களா என்பதில் பரவலா

போல், "பிரபாகரன் தோல்வியடைந்து கொண்டு போகின்றார். அவரும் அவரது இயக்கமும் உயிர்வாழ வேண்டுமாயின், அது ஓர் சிறிய கெரில்லா அணியாக மாற்றப்பட வேண்டும். அதற்கு இன்றிருக்கக் கூடிய அதிகளவு அங்கத்தவர்கள் தேவையில்லை. எனவே முக்கியமானவர்களைத் தவிர ஏனையோரை பலிகொடுப்பதே இதற்கான ஒரே வழி" என்ற எழுத்தை உண்மையாக்கிவிடும்.

வன்னியில், இருபத்தைந்தும் ஐம்பதுமாக நாளாந்தம் கொல்லப்படுவது தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் என்பதை மறந்து போகக் கூடாது. இவர்களைத் தொடர்ந்து கொல்லக் கொடுப்பது புத்திசாலித்தனமானதா என்பதனைச் சிந்திக்க வேண்டும்.

எனவே போராட்ட உபாயங்களும், போர்த் தந்திரங்களும் மாற்றப்பட வேண்டும். தமது அரசியல், இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக புலிகளுக்கு ஆழமான ஓர் மீள்பார்வை அவசியமானதாகும்.

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

போராட்டம் என்பது எமது உயிர் வாழ்தலுக்காக, எமது சிறப்பான எதிர்காலத்துக்காக, எமது சமுதாயம், எமது கலை கலாசாரம் பண்பாட்டை வளர்த்தெடுப்பதற்காக. அதனைவிடுத்து, இறுதித் துளி இரத்தம் இருக்கும் வரை போராடி மடிவேன் என்பது வெறும் இயலாமையின் வெளிப்பாடாகவே இருக்கும்.

**எனவே, இறுதிவரை போராடிச் சாவதா? இல்லையேல் எமது மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதா? என்பதைச் சிந்திப்பதற்கான கடைசிக் கட்டமிது. கத்தியைத் தீட்டாமல் புத்தியைத் தீட்ட வேண்டிய கால கட்டமிது. சம்பந்தப்பட்டவர்களுக்கு இது விளங்காவிட்டால் மக்கள்தான் விளங்க வைக்க வேண்டும்.**

> போராட்டம் என்பது எமது உயிர் வாழ்தலுக்காக, எமது சிறப்பான எதிர்காலத்துக்காக, எமது சமுதாயம், எமது கலை கலாசாரம் பண்பாட்டை வளர்த்தெடுப்பதற்காக. அதனைவிடுத்து, இறுதித் துளி இரத்தம் இருக்கும் வரை போராடி மடிவேன் என்பது வெறும் இயலாமையின் வெளிப்பாடாகவே இருக்கும். இறுதிவரை போராடிச் சாவதா? இல்லையேல் எமது மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதா? என்பதைச் சிந்திப்பதற்கான கடைசிக் கட்டமிது.

பொதுமக்கள் வந்த பஸ்ஸுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் 30 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர்.

ஒருபக்கம் இராணுவ தாக்குதலால் கொல்லப்படும் தமிழ் மக்கள், மறுபக்கம் தமிழரின் விடுதலைக்காகப் போராடுபவர்களால் கொல்லப்படும் தமிழ் மக்களென அவலங்கள் அதிகரித்தே செல்கின்றன.

சமாதானத்திற்கான அரசு–புலிகளின் யுத்தம் இன்னும் எத்தனை வருடங்கள் நீளும் என்று சொல்லமுடியாத நிலையில் யுத்தம் நீண்டுகொண்டே போகின்றது.

இராணுவத்தின் இழப்புக்களைப்பற்றி அரசுக்கும் கவலையில்லை; பொதுமக்கள், புலிகள் கொல்லப்படுகின்றார்கள் என்பதைப் பற்றி பிரபாகரனுக்கும் அக்கறையில்லை.

வன்னியில் மருந்தில்லை, உணவில்லை, கல்வியில்லை, எதுவுமேயில்லை. அதுமாத்திரமல்ல, மலேரியா முதற்கொண்டு வாந்திபேதி வரை நோய்களின் இருப்பிடமாகவும் வன்னி மாறிவிட்டது. மக்க

கவே நம்பிக்கையீனங்கள் உண்டு.

கடந்த காலங்களில் நடந்த பல பேச்சுவார்த்தைகள் புலிகளால் ஒரு தலைப்பட்சமாக முறிக்கப்பட்டு, அவர்கள்தான் யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என்பதே இன்றைய சர்வதேச நிலைப்பாடு.

எனவே புலிகளின் உறுதிமொழிகள் தொடர்பாக பாரிய நம்பிக்கையீனங்கள் உண்டென்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்நிலையில் ஓர் நம்பகத்தன்மையை உருவாக்கும் பாரிய பொறுப்பும் புலிகளுக்கு உண்டு.

நீண்டுகொண்டு போகும் யுத்தம் வெறும் இழப்புக்களை மாத்திரம் விட்டுச் செல்லாது. மாறாக, தமிழ் மக்களுக்கு அற்ப சொற்ப உரிமைகளும் கிடைக்காமலேயே போய்விடும்.

எனவே யுத்தத்தை நிறுத்தும்படி அரசை வற்புறுத்தும் அதேசமயம், புலிகள் உண்மையான பேச்சுவார்த்தைக்கு தயார் என்பதையும் நிலைநாட்ட வேண்டும். குறைந்த பட்சம் குறிக்கப்பட்ட காலத்திற்கு

### கூடையிலிருந்த பூனையை வெளியே விட்ட நீலன்

புதிய அரசியல் தீர்வுத் திட்டத்தினை உருவாக்குவதில் கூட்டணிக்கும் குறிப்பாக நீலனுக்குப் பங்கிருப்பதாக நீண்டகாலமாகவே வதந்திகளாகவும், ஹேஸ்யங்களாகவும் செய்திகள் வெளிவந்தன. கூட்டணி மௌனம் சாதித்தது. ஆனால், அத்துலத் முதலி கட்சி எம்.பி. ரவி ராஜகருணாநாயக்க, 'பாராளுமன்ற தெரிவுக் குழுவை உடன் கூட்ட வேண்டும், தீர்வுத் திட்டத்தின் முக்கிய விடயங்கள் பற்றிப் பேச வேண்டும்' என பேராசிரியர் பீரிசுக்கு கடிதம் எழுதியது தொடர்பாக நீலன் கூறிய கருத்துக்கள் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

"எல்லா விடயங்களையும் தெரிவுக்குழுவில் பேசவேண்டும் என்ற அவசியமில்லை. பல விடயங்களைத் தெரிவுக்குழுவுக்கு வெளியில் முக்கியமானவர்களுடன் நாம் பேசிவிட்டோம். இத்தகைய நடைமுறை உலகில் புதிதல்ல. எனவே தெரிவுக்குழு கூடவேண்டியதில்லை" என்று கூறிவிட்டார்.

கூட்டணியின் ஒப்புதலுடன் உருப்பெறும் அந்தத் தீர்வுத்திட்டத்தில் என்ன வருகிறது என்று பார்க்க வேண்டியதுதான் பாக்கி.

### பாதை திறப்பும் சுருக்குக் கயிறும்

குடாநாட்டுக்கு தரைவழிப்பாதை திறக்கும் படையினரின் முயற்சியைத் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு போடப்படும் சுருக்குக் கயிறு எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் வர்ணித்துள்ளனர். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான போக்குவரத்து என்பது இப்போது பெரும் சிக்கல்களுக்கும், ஆபத்துக்களுக்கும், வேதனைகளுக்குள்ளும் பொதுமக்களைத் தள்ளிவிட்டுள்ளது. கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே தமது தேவைகளையும், ஆசைகளையும் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலையில் பெரும் பொருட்செலவு, நேரவிரயம் என்பவற்றுடன், தன்மானத்துக்குச் சவால்விடும் எத்தனையோ கெடுபிடிகளையும் கடந்துதான் பொதுமக்கள் கொழும்புக்கு வரவேண்டியுள்ளது. போக்குவரத்து இயல்பு நிலையில் இல்லாததால், குடாநாட்டில் வாழ்வதற்கு கூட விரும்பாத நிலைக்கு மக்கள் உட்படுத்தப்படுகின்றனர்.

எந்த நிலத்தை எமது பாரம்பரியம் என்று வலியுறுத்திப் போராட்டம் நடத்தப்படுகின்றதோ அந்த நிலத்திலிருந்து அதே மக்கள் அந்நியப்பட்டு வெளியேறும் நிலைதான் உரிமைப் போராட்டத்துக்குச் சுருக்குக் கயிறு ஆகும். மக்களை மண்ணின்மீது குந்தியிருக்கவும், எமது பாரம்பரியம்–எமது நிலம் என்ற உணர்வோடு மக்கள் வாழ முடிவதுதான் போராட்டத்தின் உயிர்ப்புத் தன்மையைப் பேணுமே தவிர, தப்பி ஓடும் மனநிலைக்கு மக்களை வழிநடத்துவது போராட்ட நலனுக்குக் கூட உகந்ததாக இருக்க முடியாது. தரைவழிப் பாதைக்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போடும் நிலையில், கப்பல் போக்குவரத்தும் படையினரின் நலன்களோடு சம்பந்தப்படுத்தப்பட்டு இராணுவ இலக்குகளாக கணிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது மக்கள் எதிர்பார்ப்பு. கடல்வழிப் பயணத்தை நடத்தி யாழ்ப்பாணம் போவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் மக்கள், தமது செயற்பாட்டின் மூலம் மறைமுகமாக விடுதலைப் புலிகளுக்கு விடுக்கும் எச்சரிக்கை புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகும். தொடர்ச்சியாக இழப்புக்களை அரசாங்கம் சகித்துக் கொண்டு மக்கள் நலன்பேணும் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்பதை எதிர்பார்க்க முடியாது என்பதால், இழப்புக்களை ஏற்படுத்தும் விடுதலைப் புலிகள் மீது மக்கள் ஆத்திரம் கொள்ளும் சூழ்நிலை தோன்றினால் அது வியப்புக்குரியதாக இருக்காது.

### வரவரத் தீவு எம்,பி, புலியாக மாறுகிறார்

தினமுரசில் வெளியான ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் கொலைகாரப் பட்டியல், புலிகளால் 1989ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இற்கெதிரான பிரச்சாரத்திற்காக வெளியிடப்பட்டது. புலிகளால் கொலை செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களும், வேறு இயக்கங்களால் கொல்லப்பட்ட ஈரோஸ் உறுப்பினர்களின் பெயர்களும் இதில் உண்டு. துரையப்பா முதல் காமினி வரை அரசியல் தொடர் எழுதும் வரலாற்றாசிரியரான தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் அற்புதராசா நடராசா, இவற்றைப் பகுத்தாராயக்கூட முடியாமல் வரலாறு எழுதிக்கொண்டிருக்கிறார். அவர் இருந்த காலத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். உம், அவரும்தான் போராட்டத்தைச் சரியானபடி நடத்தியவர்கள் என்பதைச் சொல்ல பிரேமதாசா கொடுத்த பேப்பர் பெருந்துணை புரிகிறது ரமேசுக்கு. நாய் விற்ற காசு குரைக்காது. எழுதுங்கள். உங்கள் பேர் வாழ்க! ஒரு விஷயம். முன்னர் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.'க்கு சேறடிக்க வெளியிட்ட கொலைகாரப் பட்டியலை இன்று ஈ.பி.டி.பி. யின் தினமுரசு ஈ.பி.ஆர்.எல்.எஃப். க்கு சேறடிக்க மறுபிரசுரம் செய்கின்றது. பாசிசப் புலிகளைத் தீவிரமாக எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்ளும் ஈ.பி.டி.பி. கட்சியின் எம்.பி. எங்கே போகிறார்?

படிப்பகம்

www.padippakam.com





# வவுனியா நிலவரம் "பாஸ்" தலையிடி



சிவசக்தி ஆனந்தன்
மாவட்டச் செயலாளர்
வவுனியா.

வவுனியா மாவட்டம் நான்கு அரச நிர்வாக பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு. இதன் தலை மையகமாக வவுனியா மாவட்டச் செயலகம் இயங்கி வருகின்றது. வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கு ஒரு மத்திய பகுதியாகவும் உள்ள வவுனியாநகரம் இன்று வரலாறு காணாத மக்கட் 'தொகையைத் தாங்கி நிற்கின்றது.

'றிவிரெச' இராணுவ நடவடிக்கையின்போதும் மற்றும் இராணுவ-புலி மோதலின்போதும் பாதிக்கப்பட்ட, அச்சத்தின் காரணமாக வவுனியாவின் வடக்கே இருந்து இங்கு வந்து குடியேறிய மக்களும், முகாம்களில் தங்கியுள்ளோருமே இந்த திடீர் மக்கட் தொகைப் பெருக்கத்திற்குக் காரணமாகும்.

அதன்பின்னர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'ஜயசிக்குறு' நடவடிக்கையினால் இங்கு மக்கள் வருவது குறைவாக உள்ளது. தாண்டிக்குளம் வீதியின் போக்குவரத்துத் தடைப்பட்டதே இதற்குக் காரணமாகும். இந்த மார்க்கமாக இப்போது போக்குவரத்து அனுமதிக்கப்படுவதில்லை.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு, செட்டிகுளம். வவுனியா தெற்கு சிங்களப்பிரிவு, நெடுங்கேணிஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது வவுனியா மாவட்டம்

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு

இங்கு மூன்றிலிரண்டு பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிலும் மூன்றிலொரு பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றது. தாண்டிக்குளம் பகுதியில் இருந்து புறப்பட்ட 'ஜயசிக்குறு' படையினர் தற்போது புளியங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ளனர்.

புளியங்குளத்தை அடைவதற்கு புலிகளின் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தே சென்றுள்ளனர். இருதரப்பிலும் நிறைய உயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் புளியங்குளம் வரையுள்ள கிராம மக்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

நெடுஞ்சாலைக்குக் கிழக்குப் புறமாக உள்ள நொச்சிமோட்டை, பறநாட்டான்குளம், ஓமந்தை, இறம்பைக்குளம், பணிக்கநீராவி, பண்டிக்கெய்தகுளம் ஆகிய கிராமங்களில் இருந்த மக்கள் இருப்பிடங்களை விட்டு முற்றாக வெளியேறியுள்ளனர்.

நெடுஞ்சாலையின் மேற்குப்புறமுள்ள கிராமங்களான பத்தினியார்மகிழங்குளம், சாஸ்திரிகூழாங்குளம், வேப்பங்குளம், விளாத்திக்குளம், கொந்தக்காரன்குளம் ஆகிய இடங்களில் உள்ள மக்களும் தங்கள் உயிரை மட்டும் காப்பாற்றிக்கொண்டு மாற்று இடங்களுக்கு ஓடியுள்ளனர்.

இந்த மக்களெல்லாம் தற்போது வவுனிக்குளம், மல்லாவி, புதூர், பனங்காமம், கனகராயன்குளம் ஆகிய கிராமங்களில் தற்காலிகமாகத தங்கயுளளனா.

இவர்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. தொழிலுமில்லை. வருமானமில்லை. இம் மக்கள் படும் அவலமும் சொல்லுந்தரமன்று.

## செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவு

இங்கு மூவின மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். இது முற்றிலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்த போதிலும், புலிகளின் ஊடுருவலும் இல்லாமலில்லை. இப்பகுதியிலுள்ள சிங்களக் கிராமங்களை ஊர்காவல் படையினர் காவல் காத்து வருகின்றனர்.

இங்கு சிலருக்கு அரசினால் வீட்டுத்திட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டும், விவசாயம் செய்வதற்கு காணியும் வழங்கப்பட்டுள்ளது. இக்காணிகளில் அவர்கள் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அரசினால் எந்தவித உதவியும் வழங்கப்படவில்லை. தாமே பணம் போட்டுப் பயிர் செய்வதற்கு வசதியில்லாத மக்கள்தான் இங்கு வாழ்கிறார்கள்.

இக்கிராமங்களைச் சுற்றி காட்டுப் பகுதி அமைந்துள்ளதால், காட்டுமிருகங்களின் சீண்டலுக்கும் இவர்கள் ஆளாகி இருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன்னர் கப்பாச்சி என்ற கிராமத்தில், அக்கிராமவாசி ஒருவரை யானை அடித்துக் கொன்றுள்ளது.

காட்டு யானைகளின் அட்டகாசத்தை அடக்கக் கோரி வனஇலாகா மற்றும் பிரதேச செயலகத்திற்கு மனுக்கள் மேல் மனுக்கள் அனுப்பியும் எதுவித நடவடிக்கையும் இல்லை. காட்டு யானைகளின் அட்டகாசம் அடங்கவும் இல்லை. இதனால் கப்பாச்சி கிராமவாசிகள் பலர் அக்கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டனர்.

அடம்பன்குளம் கிராமத்தில் அகதிகள் முகாம் ஒன்றும் செட்டிகுளத்தில் முஸ்லிம் மக்களைக் கொண்ட அகதிகள் முகாம் ஒன்றும் செயற்பட்டு வருகின்றது. பாஸ் பிரச்சினை இவர்களுக்கும் உண்டு. வெளியில் செல்வதானால் ஒரு நாள் பாஸ் மட்டுமே வழங்கப்படுகின்றது. எங்கும் சென்று தங்கி வேலை பார்க்க முடியாமலும், முகாமில் கொடுக்கப்படும் பணம் அன்றாடச் செலவுக்குப் போதாமலும் திண்டாடுகின்றனர்.

## நெடுங்கேணி

இராணுவக் கட்டுப்பாட்டிலும் புலிகளின் கட்டுப்பாட்டிலுமாக இருந்துவரும் பிரதேசம் இது. மக்கள் இருபகுதியினரின் துன்புறுத்தல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் இடையில் வாழ்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் செல்லும் மக்களை புலிகள் சந்தேகப்படுவதும், புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து இராணுவப் பகுதிக்கு வரும் மக்களை இராணுவம் சந்தேகப்படுவதும் வழமையாகிவிட்ட மக்களின் திண்டாட்டமாக உள்ளது.

## வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு

இப்பிரதேசத்தில் தமிழ் பேசும் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். சகல நிர்வாகத்தையும் ஒரு சிங்களப் பிரதேச செயலாளரே கவனித்து வருகிறார். இராணுவம், பொலீஸ் மற்றும் எல்லையோர கிராமப் பகுதிகளை ஊர்காவல் படையினரும் காவல் காத்து வருகின்றனர்.

## தாண்டிக்குளம் இல்லை இப்போ உயிலங்குளம்

வன்னி பெருநிலப்பரப்பு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்தும் மக்கள் தங்கள் தேவை கருதியும், புலி-இராணுவக் கெடுபிடி நிமித்தமும் 'ஜயசிக்குறு'விற்கு முன்னர் தங்கள் போக்குவரத்துகளை தாண்டிக்குளம் வழியாகவே மேற்கொண்டனர்.

தாண்டிக்குளம் தடுப்புமுகாமில் பட்ட துன்பங்களையும், நடத்தப்பட்ட விதங்கள் அனைத்தையும் இப்போது உயிலங்குளத்தில் அனுபவிக்கின்றனர்.

தாண்டிக்குளம் பாதை இப்போது போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாததால், இங்கு நடந்த, அனைத்து வேலைகளும் அதே பாணியிலேயே உயிலங்குளத்தில் நடைபெறுகிறது.

**வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கு ஒரு மத்திய பகுதியாகவும் உள்ள வவுனியா நகரம் இன்று வரலாறு காணாத மக்கட் தொகையைத் தாங்கி நிற்கின்றது.**



வவுனியா மேற்குப்புற வழிகளை தற்போது பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். வேலைகளின் நிமித்தம் பிற மாவட்டங்களுக்குச் செல்லும் மக்கள் மேற்படி பாதைகளைப் பயன்படுத்தி உயிலங்குளத்தை வந்தடைகின்றனர். உயிலங்குளத்தில் கடும் சோதனைகள், இராணுவக் கெடுபிடிகளின் பின்னர் மன்னார் அனுப்பப்பட்டு, அங்கு அவர்கள் தரம் பிரிக்கப்பட்ட பின்னரே பாஸ் வழங்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் அம் மக்கள் படும் அவஸ்தைகள் யாருக்கும் புரிவதாக இல்லை.

## செவிப்பறையைக் கிழிக்கும் ஷெல் சத்தம்

வவுனியா நகரில் அமைந்துள்ள ஜோசப் இராணுவத் தளத்தில் இருந்து ஏவப்படும் ஷெல்களை 'ஜயசிக்குறு' நடவடிக்கைகளோடு தொடர்புடையதாகவே இராணுவத் தரப்பு கூறுகின்றது. இந்த ஷெல்கள் வன்னி நிலப்பரப்பில் அமைந்துள்ள கிராமங்களின் குடிமனைகள், கோயில்கள், தேவாலயங்கள், பொதுக்கட்டிடங்களைத் தாக்காமல் இல்லை.... அவை புலிகளின் முகாம்களை மட்டும் தேடிச் செல்வதாக இல்லை.

இந்த ஷெல் வீச்சுக்கள் காரணமாக சிலர் கால் கை இழந்தும் கிராமங்களை விட்டு வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்தும் உள்ளனர். புலிகளும் ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர். என்னதான் அளவு கணக்குப் போட்டு அடித்தாலும், இது கண்ணை மூடிக் கல்லெறிவதற்கு ஒத்த விளையாட்டாகும்.

இராணுவம் அடிக்கும் ஷெல் புலிகளின் முகாம்களை விட்டும், புலிகள்அடிக்கும் ஷெல் இராணுவ முகாம்களை விட்டும் விழுந்து வெடித்ததில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜோசப் இராணுவ முகாமைச் சுற்றி குடிமனைகள் இருப்பதனால் இந்த ஷெல் வீச்சுக் காரணமாக பச்சிளங் குழந்தைகள், கர்ப்பிணிகள், வயது முதிர்ந்தோர் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் ஜோசப் முகாமில் இருந்து பலநூறு ஷெல்கள் ஏவப்பட்டதால், ஏவும்போது வெளியேறும் நச்சுப் புகையால் கோயில்குளம் பகுதி மக்களுக்கு தலைவலியும் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள்.

இந்த ஷெல்லடிகளை இருசாராரும் நிறுத்த மனித உரிமை அமைப்புக்கள் தம்மால் ஆன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## வவுனியா பாஸ் கெடுபிடி

வவுனியாவில் எல்லோருக்கும் பாஸ்தான். அதாவது எல்லோரும் பாஸ் பெற்றே ஆக வேண்டும். வவுனியா என்றாலே தலையிடி தொடங்குமளவுக்கு பாஸ் கெடுபிடிகள் எல்லோரையும் வாட்டுகிறது. வவுனியாவின் நிரந்தரப் பிரஜைகள், வெளிமாவட்டங்களிலிருந்து இங்கு வருபவர்கள் என பாஸ் நடைமுறை இருந்து வருகிறது.

வவுனியாவில் நிரந்தரமாக வதிபவர்களுக்கு நிரந்தரப் பாஸ் எனும் நடைமுறை இருக்கின்றபோதும், இதை எல்லோராலும் இலகுவாகப் பெற்றுவிட முடியாது. இதைப் பெறுவதென்பது பெரும் பகீரதப் பிரயத்தனம்தான்.

1990இல் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களில் மூன்றிலொரு பகுதியினரே நிரந்தரப் பாஸ் பெற்ற பாக்கியசாலிகளாக உள்ளனர். 1992-94 காலப்பகுதியில் வாக்காளராகப் பதியப் பெற்றவர்களுக்கும் இது வழங்கப்படுகின்றது.

## வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்கள்

வெளிமாவட்டங்களில் இருந்து வவுனியாவிற்குள் அரச, திணைக்களங்களில் வேலை செய்பவர்களுக்கு, அவர்களின் வேலைகளின் தரத்தைப் பொறுத்து நிரந்தர, மூன்று மாத பாஸ் நடைமுறையில் உள்ளது. இதுபோல் வேறு காரியங்களுக்காக வருபவர்களுக்கு ஒரு நாள் பாஸ் வழங்கப்பட்டு, பின்னர் தேவையைப் பொறுத்து ஒருவார காலம் வரை நீடித்துக் கொடுக்கப்படுகிறது.

ஒருவாரத்துக்குள் காரியம் முடிகிறதோ இல்லையோ, அவர்கள் வவுனியாவை விட்டு வெளியேறிவிட வேண்டும்.

இந்த பாஸ் நடைமுறையானது பாதுகாப்பு காரணங்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இதன் மறுபக்கத்தையும் அரசு சற்று யோசிக்க வேண்டும். ஒன்றுமறியாதவர்களெல்லாம் துன்பப்படுவதையும், அலைக்கழிந்து அவதியுறுவதையும், நாளாந்த வேலைகளைக்கூட விட்டுவிட்டு 'பாஸ் பாஸ்' என்று தலையைப் பிய்த்துக் கொண்டு திரிவதையும் இங்கு பார்க்கக் கூடியதாக உள்ளது.



**ஜோசப் இராணுவத் தளத்தில் இருந்து ஏவப்படும் ஷெல்களை 'ஜயசிக்குறு' நடவடிக்கைகளோடு தொடர்புடையதாகவே இராணுவத் தரப்பு கூறுகின்றது. இந்த ஷெல்கள் புலிகளின் முகாம்களை மட்டும் தேடிச் செல்வதாக இல்லை. வன்னி நிலப்பரப்பில் அமைந்துள்ள கிராமங்களின் குடிமனைகள், கோயில்கள், தேவாலயங்கள், பொதுக்கட்டிடங்களையும் தாக்குகின்றன.**

www.padippakam.com



# எங்கு போய் முடியும்?

சாணக்கியன்

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கம் பல் வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றது. 1995ம்ஆண்டு ஆவணி மாதம் அரசாங்கம் தீர்வுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்தது. பின்னர் 1996ம் ஆண்டு அவை சிறிது குறைக்கப்பட்டு 1996 மாசியில் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. தெரிவுக் குழுவில் வருடக் கணக்காக இது தொடர்பான விவாதம் நடத்தப்பட்டது. பேராசிரியர் பீரிஸின் கூற்றுப்படி, ஏறத்தாழ 75 கூட்டங்கள் (Sittings) கூட்டப்பட்டுள்ளன.

இதில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி., ஈரோஸ், புளொட், ரெலோ என்பன இணைந்து இத்தீர்வுத் திட்டத்தைத் திருத்துவதற்கென ஒரு தொகுதி ஆலோசனைகளை (a set of proposals) வழங்கின. ஐ.தே.க.வும் பல திருத்தங்களை முன்வைத்தது. இதில், தமிழ்க் கட்சிகள் வைத்த திருத்தங்கள் விவாதத்திற்கே எடுக்கப்படவில்லையென தெரிவுக்குழுவில் பங்குபற்றும் தமிழ் பா.உ.க்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், இத்தீர்வுத் திட்டத்தை வெட்டிக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு ஐ.தே.க. வைத்த ஆலோசனைகள் பரிசீலனைக்கெடுக்கப்பட்டன. உதாரணமாக, அரசியல் சாசன சரத்து II ஐ முழுமையாக கைவிடாமல் அதனைத் திருத்துவது என்ற 'சொக்ஸி' அவர்களின் ஆலோசனை, 'நிறைவேற்றுக் குழு முறை' என்ற ஏ.சி.எஸ்.ஹமீட்டின் யோசனை போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.

மொத்தத்தில் அரசின் தீர்வுத் திட்டத்தை, தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு மாற்றக்கூடிய தமிழ்க் கட்சிகளின் ஆலோசனைகள் முழுமையாக நிராகரிக்கப்பட்டு, தீர்வுத் திட்டத்தைச் சிதைக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட ஆலோசனைகளே பரிசீலனைக்கெடுக்கப்பட்டன.

இவை ஒருபுறமிருக்க, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டம் இரு கூறாகப் பிரிக்கப்பட்டு பிரச்சினைக்குரிய விடயங்கள், பிரச்சினையில்லாத விடயங்கள் என வகுக்கப்பட்டு பிரச்சினையில்லாத விடயங்கள் மாத்திரமே விவாதத்திற்கெடுக்கப்பட்டது. ஆனால் இவ்வாறானவிடயங்களில் விவாதம் நடைபெற்றதே தவிர எதிலும் ஓர் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இரண்டாவது வகையான பிரச்சினைக்குரிய விடயங்கள் விவாதத்திற்கே எடுக்கப்படவில்லை. இதில் முக்கியமாக அதிகார அலகு, சட்ட ஒழுங்கு, காணி காணிப்பங்கீடு, மாகாணசபையைக் கலைத்தல் போன்ற பல விடயங்கள் இவற்றுள் அடக்கம்.

இதில் அலகு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி – முஸ்லிம் காங்கிரசுக்கிடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால் இதனை பல தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் குழுக்களும் எதிர்ப்பதாகவும், ஐ.தே.க. வோ அல்லது அரசோ இதுதொடர்பான கருத்தை இதுவரை கூறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவைதவிர, தெரிவுக்குழுவுக்கு வெளியில் உத்தியோகப்பற்றற்ற பல பேச்சுவார்த்தைகள் நடந்தன. இது ஐ.தே.க. வுக்கும் – அரசுக்குமிடையில், பாராளுமன்றத் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் – அரசுக்குமிடையில், ஐ.தே.க. வுக்கும் – தமிழ்க் கட்சிகளுக்குமிடையில் என நீண்டு சென்றன. ஆனால் இவை கருத்துக்களை அறியும் களமாக இருந்தனவே தவிர, இக்கூட்டங்களில் முடிவுகள் எதுவும் எடுக்கப்பட்டதாக இல்லை.

இறுதியில் பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவுக்கு வந்துவிட்டதாகவும், மேற்கொண்டு கருத்துக்களை அறிய வேண்டிய தேவை ஏற்பட்டால்தான் தெரிவுக்குழுவைக் கூட்டுவேன் என்றும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்டவை அரசு எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வை கையாள்கின்றது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தும்.

இப்பொழுது அரசாங்கம் இரண்டாம் கட்டத்திற்கு வந்துள்ளது. அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசியல் சாசனத்தில் உள்ளடக்குவதும், சட்டமூலமாக்குவதும் என்ற விடயங்கள் இதில் அடங்கும். அதாவது தீர்வுத் திட்டத்தின் இறுதி வடிவம் இன்னும் எட்டப்படாத நிலையில், தீர்வுத் திட்டத்தில் என்ன இருக்கின்றது என்பது இன்னும் பொதுமக்களுக்குத் தெரியாத நிலையில் அதனை நடைமுறைப் படுத்தப் போவதாக பேராசிரியர் பீரிஸ் கூறிவருகின்றார்.



ஐ.தே.க.வுடன் பேசுவதா? புலிகளுடன் பேசுவதா? ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் பேசுவதா? மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு ஐ.தே.க. சம்மதிக்குமா? சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசு முன்வருமா? சர்வஜன வாக்கெடுப்பு எப்படி அமையப் போகின்றது? சட்டபூர்வமானதா? அல்லது கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பாக இருக்குமா? இப்படி பல கேள்விகள் உள்ளன.

மொத்தத்தில் மிகவும் இறுக்கமான ஓர் நிலைமைக்குள் அரசு மாட்டுப்பட்டுள்ளது.

அரசின் தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டின் முதலாவதாக, இத்தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவாக மூன்றிலிரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத்தில் தேவை. அதன்பின்னர் அரசியல் சாசனத்தின் சில பகுதிகளை நீக்குவதற்கு மக்களின் பெரும்பான்மை ஆதரவும் தேவை. இதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தி, 50 வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெறவேண்டும்.

ஆனால், ஐ.தே.க. வைப் பொறுத்தவரை, ஓர் கருத்தை வலியுறுத்தி வருகின்றது. அதாவது புலிகளுடன் பேசாமல் உருவாக்கப்படும் தீர்வுத் திட்டத்தால் நிரந்தர சமாதானம் ஏற்படுமா? என்பதே அக் கேள்வியாகும்.

பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்குக்கு ஐ.தே.க. ஒத்துழைக்கா விட்டால், கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பு (Non Binding Refeundum) ஒன்றை நடத்தி, அங்கு 50 வீத வாக்கைப் பெறுவதன் மூலம் மக்களின் ஆதரவு தீர்வுத் திட்டத்திற்கு இருக்கின்றது என்பதைக் காட்டி, ஐ.தே.க. வை ஆதரவளிக்கும்படி நிர்ப்பந்திப்பது என்பது அரசின் இன்னொரு தந்திரோபாயமாக உள்ளது.

ஆனால் ஐ.தே.க. அதனைத் தான் ஏற்றுக்கொள்ளாது என்பதையே சூசகமாகக் காட்டி வருகின்றது. அதுமாத்திரமல்லாது, அரசின் இப்படியான நடவடிக்கைகளை நீதிமன்ற ஆணைகளினூடு தடுத்து நிறுத்தவும் முயற்சி செய்யும். அது இந்நாட்டில் ஓர் அரசியல் சாசன நெருக்கடி ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு வழிசமைக்கும்.

இன்றிருக்கக்கூடிய அரசியல் சாசனத்தை மாற்ற, பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. ஆளும் கட்சிக்கு அந்தப் பலம் கிடையாது. ஐ.தே.க. ஒத்துழைக்கும் என்பதிலும் நம்பிக்கைக் கீற்றுகள் தென்படவில்லை.



தீர்வுத் திட்டத்தின் இறுதி வடிவம் இன்னும் எட்டப்படாத நிலையில், தீர்வுத் திட்டத்தில் என்ன இருக்கின்றது என்பது இன்னும் பொதுமக்களுக்குத் தெரியாத நிலையில் அதனை நடைமுறைப்படுத்தப் போவதாக பேராசிரியர் பீரிஸ் கூறிவருகின்றார்.

ஜே.ஆர். உருவாக்கிய 1978ம் ஆண்டு அரசியல் சாசனம், 13 தடவைகள் ஐ.தே.க. அரசாங்கத்தாலேயே திருத்தப்பட்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியாமைக்கு ஜே.ஆரின் அரசியல் சாசனமும் ஒரு காரணமாகும்.

இந்நிலையில் அரசியல்சாசனம் புனிதமானது, சட்ட வழிமுறைகளை மீறி அதனை எதுவும் செய்ய முடியாது என்று விட்டுவிடுவதா, இல்லையேல் பிரச்சினைகளைத் தீர்க்க உதவாத அரசியல் சாசனம் தூக்கிஎறியப்பட வேண்டுமா? என்ற முடிவுக்கு சுப்ரீம் கோர்ட் வர வேண்டி இருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, பிரச்சினைக்குரிய விடயங்கள் தொடர்பாக ஐ.தே.க. வுடன் பேசி ஓர் முடிவுக்கு வந்தாலே புலிகளுடன் பேச முடியும் என்ற ஓர் கருத்தையும் செப்டம்பர் 4ம் திகதிய பத்திரிகையாளர் மாநாட்டில் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஆகவே, விடுதலைப் புலிகளுடன் பேசலாம் என்ற ஓர் தொனியையும் அரசு கொண்டுள்ளதாகத் தோன்றுகின்றது. ஆனால் அதுவும் சுலபமான காரியமல்ல. முக்கியமான விடயங்களில் ஐ.தே.க. வுக்கும் ஆளும் கட்சிக்கும் ஓர் இணக்கப்பாடு வேண்டும். பின்னர் புலிகள் பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்க வேண்டும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் அவர்கள் பேச வருவார்களா என்பது சந்தேகம் தான்.

பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமாயின், ஏற்கனவே இரு தரப்பும் கூறிவரும் முன்நிபந்தனைகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இவை எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பதெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மொத்தத்தில் மிகவும் இறுக்கமான ஓர் நிலைமைக்குள் அரசு மாட்டுப்பட்டுள்ளது. ஐ.தே.க.வுடன் பேசுவதா? புலிகளுடன் பேசுவதா? ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் பேசுவதா? மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு ஐ.தே.க. சம்மதிக்குமா? சர்வஜனவாக்கெடுப்புக்கு அரசு முன்வருமா? சர்வஜன வாக்கெடுப்பு எப்படி அமையப் போகின்றது? சட்டபூர்வமானதா? அல்லது கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பாக இருக்குமா? இப்படி பல கேள்விகள் உள்ளன. இவற்றுக்கு ஆரோக்கியமான பதில் கிடைக்க வேண்டுமாயின், பல விடயங்கள் நடந்தாக வேண்டும்.

ஐ.தே.க. வும், அரசும் சிங்கள இனவாதத்தைக் கைவிட வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். சமஷ்டி அரசு முறையை அங்கீகரிக்க வேண்டும். புலிகளும் தமிழீழம் என்றில்லாமல் விட்டுக்கொடுக்கும் மனோநிலையும், உண்மையான பேச்சுவார்த்தைக்கும் முன்வர வேண்டும். அரசும் யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச முன்வர வேண்டும்.

இவை நடைபெறாதபட்சத்தில், சமாதானத்திற்கான முழு முயற்சியும் தோல்வியிலேயே முடியும்.



கே.என். சொக்ஸி



ஏ.சி.எஸ். ஹமீட்



தமிழ்க் கட்சிகள் வைத்த திருத்தங்கள் விவாதத்திற்கே எடுக்கப்படவில்லையென தெரிவுக்குழுவில் பங்குபற்றும் தமிழ் பா.உ.க்கள் கூறுகின்றார்கள். இத்தீர்வுத் திட்டத்தை வெட்டிக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு ஐ.தே.க. வைத்த ஆலோசனைகள் பரிசீலனைக்கெடுக்கப்பட்டன.

> சுதந்திரம் அடைய விரும்புகிறவன் தன்னினத்திலாவது அயலினத்திலாவது நிர்த்தோஷியாய் இருக்கும் ஒருவனுக்கு வேண்டுமென்றே மனப்பூர்வமாய் எவ்விதத் தீங்கும் இழைக்கக்கூடாது. அப்படிச் செய்வதால் மகா பரிசுத்தமான சுதந்திரத்தை அவன் அபரிசுத்தப்படுத்துகிறான். ஏனைய சுதந்திர ஸ்தாபனங்களின் முயற்சிக்குத் தடையாய் விடுகிறான்....
>
> – பாரதி

# இந்திய இலங்கை ஒப்பந்தம்

## 10 வருடத்தின் பின் ஓர் பார்வை



(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஒப்பந்தத்தின் முன்னுரையில், இலங்கை பல மொழி பல இன பல மத மக்களைக் கொண்ட (பல்தேசிய) நாடு என்பதைக் குறிப்பிட்டதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்கள் ஓர் தனித் தேசியஇனம் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதன் அடிப்படையிலேயே அதிகாரப் பகிர்வு என்ற விடயமும் உருவானதென்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். (ஏனெனில் திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர் தரப்பு முன்வைத்த நான்கு அடிப்படை அம்சங்களை மீண்டும் வலியுறுத்தி, அதனடிப்படையில் தீர்வு காண வேண்டுமென இன்று புதிதாக சிலர் குரலெழுப்புவது எந்தளவுக்கு அர்த்தமுள்ளது என்பதைப் பரிசீலிப்பதற்கு இது உதவும். இதுபற்றி தனியாக ஆராயலாம்.)



ஒப்பந்தத்தின்படி குறிப்பிட்ட கால எல்லைக்குள் அனைத்து இயக்கங்களும் இந்திய ராணுவத்திடம் ஆயுதங்கள் அனைத்தையும் ஒப்படைப்பது என்றும், மூன்று மாத காலத்திற்கு ஓர் இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது என்றும், இக்காலகட்டத்தில் இந்திய அமைதிப் படை சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கு இவ்விடைக்கால அரசுக்கு ஒத்துழைக்கும் என்றும், மூன்று மாதங்களில் மாகாண அரசுக்கான ஓர் தேர்தலை நடத்த ஒழுங்குகளை மேற்கொள்வதே இடைக்கால அரசின் பணியாகும் என்றும் குறிப்பிடப்பட்டது.

இதன்பிரகாரம் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியமைக்கும் கட்சி அல்லது மாகாண அரசு, தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக இலங்கை அரசுடன் அதிகாரப் பகிர்வு பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் பேசும். இங்கு புலிதான் ஏகப்பிரதிநிதிஅல்லது இன்னோர் கட்சிதான் ஏகப்பிரதிநிதி என்று தம்மைத்தாமே பிரகடனப்படுத்தி மற்றவர்களை அழித்தொழிக்கும் நிலை இல்லாமல் போகும் என்பதுடன், ஜனநாயக அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் பேசும் போது, கோரிக்கைகளை வேறெந்தக் காரணங்களையும்காட்டி அரசு உதாசீனம் செய்ய முடியாது என்பதும், அவ்வாறு உதாசீனம் செய்யும் பட்சத்தில் உத்தரவாதியான இந்தியா அதற்குத் தீர்வு காணவேண்டிய நடவடிக்கையை எடுக்கும் என்பது நிலைப்பாடாக இருந்தத.

### ஒப்பந்தமும் இயக்கங்களின் வேறுபட்ட நிலைப்பாடுகளும்

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னால் புலிகள் உட்பட அனைத்து இயக்கத்தவர்களும் டெல்லிக்கு அழைக்கப்பட்டு ஒப்பந்தத்தின் சாராம்சம் தொடர்பாக விளக்கப்பட்டதுடன், ஒப்பந்தத்திற்கு ஆதரவளிக்கும்படியும் கேட்கப்பட்டது. புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் (த.வி.கூட்டணி உட்பட) முன்னர் நாம் கவனித்த பல முக்கிய குறைபாடுகளை (குடியேற்றம், நிலம், வட-கிழக்கு இணைப்பு, சமஷ்டி இன்மை) சுட்டிக்காட்டி தமது அதிருப்தியைத் தெரிவித்ததுடன் இலங்கை அரசு இவற்றை நடைமுறைப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமில்லை என்பதையும் தெரிவித்தனர்.

இக்குறைபாடுகளை சீர்செய்வது தொடர்பில் தெரிவிக்கும்போது ராஜீவ் காந்தி, வட-கிழக்கு தற்காலிக இணைப்பு என்பது சிங்கள மேலாதிக்கவாதிகளை சமாளிப்பதற்கான தந்திரோபாயமே தவிர நடைமுறையில் அது நிரந்தரமாக்கப்படும்; சர்வஜன வாக்கெடுப்பு நடக்காது என உத்தரவாதமளித்தார். (இவ்வகையில் கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு கிழக்கு ஒரே நிர்வாகத்தின் கீழேயே செயற்பட்டு வருகின்றது என்பதையும் நோக்க வேண்டும்.)

சிங்கள குடியேற்றம் போன்ற பிரச்சினைகள் இறுதியாக பேசப்பட வேண்டியவை. ஆரம்பத்தில் அதனை எடுத்தால் பேச்சுவார்த்தைக்குத் தடையாக அமையும் எனக் குறிப்பிடப்பட்டதுடன், மொத்தத்தில் அனைத்து விடயங்களையும் நாம் உங்கள் நலனைப் பேணும் வகையில் செய்வதற்கு உறுதுணையாக இருப்போம் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டது.

### புலிகளின் நிபந்தனை

புலிகளுடன் தனியாகவே பேசப்பட்டது. ஏனெனில், அவர்களால் தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இயக்கங்களுடன் சமமாக இருந்து பேச அவர்களின் தன்முனைப்பு (EGO) இடங்கொடுக்கவில்லை என்பதுடன் அவர்களது தேவையும் வேறாகவே இருந்தது. அப்பேச்சுவார்த்தையில் தாம் தனியாக வேறு நிபந்தனைகளை வைத்து, அந்நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

1. இடைக்கால அரசைத் தம்மிடம் தரவேண்டும்.
2. ஆயுதங்களை ஒப்படைத்தால், தமக்கு மாதாந்தம் ஒரு கோடி ரூபா வசூல் இல்லாமல் போகும். எனவே எமது உறுப்பினர்களைப் பராமரிக்க மாதம் ஐந்து லட்சம் இந்திய ரூபாய்கள் (அவ்வேளையில் இலங்கையில் ஒன்றேகால் கோடி) தரவேண்டும் என்றும் கோரினர்.

இதற்கு, 'ஜனநாயக அடிப்படையில் இடைக்கால அரசை உங்களிடம் முழுமையாகத் தருமாறு கேட்டது நியாயமல்ல; ஆனால், முன்னுரிமை தரப்படும்' என்ற உறுதிமொழியும், அவர்கள் கேட்ட பணமும் தருவதாக உறுதிகூறப்பட்டதும் ஏற்றுக்கொண்டனர்.

ஏனைய கட்சிகள் ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி தமிழ் மக்கள் நலனடிப்படையில் அதிருப்தி தெரிவித்தனர். ஆனால் புலிகள், தமக்கு அதிகாரமும் பணமும் தந்தால் ஏற்றுக்கொள்வதாகக் கூறினர். இவ்வடிப்படையில் முதற்கொடுப்பனவாக ஒன்றேகால் கோடி ரூபாவும் உடனடியாகவே பெற்றுக் கொண்டனர்.

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பின் சுதுமலையில் புலிகள் பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். இதில் அவர்களது முக்கிய தலைவர்களான பிரபாகரன், மாத்தையா,குமரப்பா, புலேந்திரன்,கிட்டு அனைவரும் கலந்துகொண்டனர். "நாம் இந்தியாவை நம்புகிறோம்: ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்" என பிரபாகரன் பேசியபோது கரவொலி வானைப் பிளந்தது. இது, மக்கள் புலிகள் மீது வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டவில்லை. அதைவிட இந்தியாவை நம்பினர் என்பதையும், போராட்டம்மீது விரக்தியும் வெறுப்பும் அடைந்திருந்ததுடன், அமைதியை விரும்பினர் என்பதையும் தெளிவாகக் காட்டியது.



புலிகளுடன் தனியாகவே பேசப்பட்டது: ஏனெனில், அவர்களால் தடைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இயக்கங்களுடன் சமமாக இருந்து பேச அவர்களின் தன்முனைப்பு (EGO) இடங்கொடுக்கவில்லை என்பதுடன் அவர்களது தேவையும் வேறாகவே இருந்தது.

ஆனால், இக்கரவொலி புலித் தலைவர்களுக்கு கடுஞ்சினமூட்டியது. அக்காலகட்டங்களில் இந்திய அமைதிப்படை போகுமிடங்களிலெல்லாம் "இந்திய ராணுவம் வாழ்க" என மக்கள் கோஷமிட்டதுடன், மாலையிட்டு வரவேற்று உபசரித்தனர். "புலிகள் வாழ்க" என யாரும் கோஷம் போடவுமில்லை. மாலை போடவுமில்லை.

போராட்டத்தில் கொல்லப்பட்ட தோழர்கள் ஆதரவாளர்கள் வீடுகட்குச் சென்று ஆறுதல் கூறியமையும், போகுமிடங்களில் வரவேற்பு அதிகரித்து வந்தமையும், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் அவர் வரவேற்கப்பட்டதும் புலிகளுக்கு ஆத்திரமூட்டுவதாகவே அமைந்தது.

தாம் மட்டுமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என அறிவித்துவந்த புலிகளுக்கு, ஜனநாயகச் சூழ்நிலை ஒன்று ஏற்படும் பட்சத்தில் தமது பிரகடனம் கேலிக்குரியதாகிவிடும் என்ற உள்ளார்ந்த பயம் ஏற்பட்டது. அத்துடன், அமைதிப்படையிடம் ஆயுத ஒப்படைப்பு நடந்துகொண்டிருந்த வேளையிலும் புலிகள் ஆங்காங்கே சிலரைச் சுட்டுக் கொன்றனர். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் கிழக்கு மாகாணத்தில் அவர்களது இரண்டு அலுவலகங்களை அடித்து நொருக்கியதுடன், இரு புலி உறுப்பினர்களையும் வெட்டிய சம்பவம் நிகழ்ந்தது.

- எஸ். கந்தையா

இவையெல்லாம் மக்கள் தம்மை அந்நியப்படுத்திவிட்டதாக புலிகளை எண்ண வைத்தது. தம்மிடமிருந்த பயம் போய், தமக்கே மக்கள் புத்திமதி சொல்லும் நிலைக்கு வந்துவிட்டதை புலிகள் தமக்கேற்பட்ட அவமானமாகவே கருதினர்.

இதனால் யாரும் எதிர்பாராத வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் ஏனைய இயக்கங்களுக்கெதிரான திடீர்த் தாக்குதலைமேற்கொண்டனர். இதில் பல புளொட் தலைவர்கள், பல ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்கள் உட்பட பொதுமக்களையும் சேர்த்து நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.ஆயுதங்களை ஏனைய இயக்கங்கள் கையளித்துவிட்டநிலையில்.

### ஜனநாயகச் சூழலை விரும்பாதவர்கள்

ஏனைய இயக்கங்கள் பரவலாக தமது அலுவலகங்களைத் திறந்து மக்களையும் தமது ஆதரவாளர்களையும் சந்தித்து மீண்டும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் அரசியல் வேலைகளை ஆரம்பித்தனர்.



"நாம் இந்தியாவை நம்புகிறோம்; ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்" என பிரபாகரன் பேசியபோது கரவொலி வானைப் பிளந்தது. இது, மக்கள் இந்தியாவை நம்பினர் என்பதையும், போராட்டம் மீது விரக்தியும் வெறுப்பும் அடைந்திருந்ததுடன், அமைதியை விரும்பினர் என்பதையும் தெளிவாகக் காட்டியது.

இவ்வகையில், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தோழர் நாபா கிராமங்கள் தோறும் சென்று மக்களைச் சந்தித்தமையும், அமைதிப்படை இருக்கும்போதே நடந்த புலிகளின் இந்தக் காட்டுத் தர்பார் அவர்களது சர்வாதிகாரப் போக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

ஆயுதங்களைக் கையளித்ததால் அனைவரின் பாதுகாப்புக்கும் அமைதிப்படை உத்தரவாதம் செய்திருந்தும், அந்நேரத்தில் புலிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பார்வையாளர்களாகவே இருந்தனர். எனவே, 'புலிகள் மீது நடவடிக்கை எடு அல்லது எமது பாதுகாப்புக்கு ஆயுதம் தா!' என்ற ஏனைய இயக்கங்களின் கோரிக்கை எழுந்தது. ஆயுதக் கலாசாரத்திற்கு முடிவுகட்டி, ஜனநாயக சூழலைத் தோற்றுவிப்பதற்கான ஆரம்பத்தைப் புலிகள் அந்தச் சந்தர்ப்பத்திலும் குழப்பினர்.

### தமிழ் மக்களை ஆதரித்த இந்தியாவை பகையாக்கினர்

ஜனநாயகச் சூழ்நிலையில் மக்கள் தம்மை ஏற்கமாட்டார்கள். ஆயுதத்தின் மூலமே தம்மை ஏற்க வைக்கமுடியும் என்ற அவர்களின் நம்பிக்கையே இதன்மூலம் வெளிப்பட்டது. அதாவது, ஏனைய இயக்கங்கள், கட்சிகளை ஆதரிப்போர்க்கு மீண்டும் ஓர் எச்சரிக்கை கொடுப்பதும், தம்மை ஆதரித்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

ஆயுதங்களைக் கடல் மூலம் புலிகள் கொண்டுவந்தபோது குமரப்பா, புலேந்திரன் உட்பட 13 புலிகள் ஆயுதங்கள், வோக்கிடோக்கி முதலியவற்றுடன் இலங்கைக் கடற்

www.padippakam.com





மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தோழர் நாபா கிராமங்கள் தோறும் சென்று மக்களைச் சந்தித்தார்; இறந்த தோழர்களின் குடும்பத்தினர்க்கு ஆறுதல் சொன்னார்.

படையினரால் கைதுசெய்யப்பட்டனர். 'ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கியதும் இங்கை அரசால் போராளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுவிட்டது. எனவே தம்மைக் கைதுசெய்தது தவறு' என்பது புலிகளின் வாதம். 'ஆயுதங்களை ஒப்படைத்திருந்தால் இவர்களிடம் எப்படிஆயுதம் வந்தது? ஜனநாயகப் பாதைக்கு வந்துவிட்டதாகக் கூறிவிட்டு இரகசியமாக ஆயுதங்களை வைத்திருந்ததால்தான் கைதுசெய்தோம்' என்பது கடற்படையின் வாதம்.

இப்பதட்டத்திற்கு முடிவுகட்ட இந்தியா முயற்சித்தது. கைதுசெய்யப்பட்டவர்கள் பலாலி இராணுவ முகாமிலேயே வைக்கப்பட்டனர். அவர்களைக் கொழும்புக்குக் கொண்டுசெல்ல அமைதிப்படை அனுமதிக்கவில்லை.

இப்பிரச்சினைக்கான தீர்வினைக்காண இந்தியாவுக்கு அவகாசம் கொடுக்காமலே புலிகள் இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்தை வேகமாக ஆரம்பித்தனர். அமைதிப்படை இலங்கை அரசுக்கு உதவ வந்ததாக மக்களை நம்பவைக்க முயன்றனர். இந்தியாவை மீறி இலங்கை செயற்பட முடியாதென மக்கள் உணர்ந்திருந்ததால் அது பெரிதாக எடுபடவில்லை.

இந்தக் கைது நடவடிக்கையைக் காரணம் காட்டி இந்திய இராணுவத்திற்கெதிராக மக்களைத் திருப்புவதே புலிகளின் நோக்கமாக இருந்தது. மக்கள் முன்வராததால், தமது ஆண் பெண் உறுப்பினர்களையே அமைதிப்படை முகாம்களுக்கு முன்சென்று கல்லெறிவது, செருப்பெறிவது என மக்கள் எதிர்ப்பாகக் காட்ட முயன்றனர். இது மக்களுக்கு ஒருபுறம் எரிச்சலையும் மறுபுறம் விரக்தியையும் தோற்றுவித்தது. எனினும் புலி ஆதரவாளர்கள் இதனை மக்கள் போராட்டமாக பிரச்சாரப்படுத்தினர்.

## போராட்டத்தினுள்ளேயே எதிரிகள் உருவாயினர்

புலிகள் ஏற்கனவே எல்லா இயக்கங்களையும் தடைசெய்திருந்தாலும், யாழ்குடா தவிர வன்னி, கிழக்குப் பகுதிகளில் ஏனைய இயக்கங்களை முழுமையாக அழிக்க முடியவில்லை என்பதுடன் ஒப்பந்த காலகட்டம் வரை வன்னியிலும் கிழக்கிலும் ஏனைய இயக்கங்களை அழித்தொழிப்பதற்கான ,போராட்டமாகவே புலிகளின் போராட்டமும், அதற்கெதிராக தம்மைத் தற்காத்துக்கொள்வதும் இருப்பை உறுதி செய்துகொள்ளும் போராட்டமே ஏனைய இயக்கங்களின் நடவடிக்கையாகவும் இருந்தது.

இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டிய விடயம், எல்லா இயக்கங்களும் இலங்கை இராணுவத்திற்கெதிராகப் போராடி பலமாக முன்னேறி வந்த நிலையிலிருந்து மாறி, புலிகளின் சகோதரப் படுகொலை வெறி ஆரம்பித்ததும், புலிகளும் ஏனைய இயக்கங்களும் இரண்டு எதிரிகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்குப் பலவீனப்பட்டதுடன் போராட்டமும் கேலிக்கூத்தானது.

ஒருபுறம் புலிகளின் வெறித்தனமான வேட்டையாடல்களுக்கும் மறுபுறம் இராணுவத்திற்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஏனைய இயக்கங்கள் தள்ளப்பட்டன. மறுதலையாக, புலிகளும் ஏனைய இயக்கங்களுக்கும் இராணுவத்திற்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் இராணுவத்திற்கு முகங்கொடுப்பது என்ற நிலைமை குறைவாகவே இருந்தது.

## கொடூர மனங்கள் விடுதலைக்கு உதவுமா?

ஏனைய இயக்கங்களை அழிப்பதற்கும், ஆதரவாளர்களை கடும் அச்சத்திற்கு இட்டுச் செல்லவும் புலிகள் கையாண்ட கொடூரமான முறைகள், உலகின் கொடுங்கோலர்களான ஹிட்லர், பொல்போட் போன்றவர்களின் கொடூரத்திற்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல; அளவில் மட்டும் குறைவாக இருக்கலாம். இதுபற்றி எழுதுவதானால் பல புத்தகங்கள் எழுதலாம். சில உதாரணங்களைக் கூறுவது அவசியம்.

மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த பாண்டியன் (வன்னி) என்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒருவர் புலிகளால் கைது செய்யப்பட்டு, பின் அவர் தலை தனியாகத் துண்டிக்கப்பட்டு அத்தலையை ஓர் தடியில் மாட்டி அத்தோழரின் ஊருக்குள் ஊர்வலமாக (அனைவரும் பார்க்க வேண்டும் என்பதற்காக) எடுத்து வந்து தோழரின் வீட்டுப் படலையில் மாட்டி விட்டனர். விடுதலைக்காகத் தன்னுயிரையே கொடுக்க முன்வந்து போராடிய தோழர், போராளிகள் எனக் கூறும் ஓர் வெறிக்கும்பலாலேயே இவ்வாறு கோரத்தனமாகக் கொல்லப்பட்டார்.


குமார் (மண்டய்யா), பார்த்திபன் அக்கரைப்பற்று ஆகிய இரு தோழர்களை தமது வாகனத்தில் கட்டித் தெருத்தெருவாக இழுத்து, அவர்களது முகம், உடம்பில் உள்ள சதைகள் பெரும்பாலும் பிடுங்கப்பட்டு அடையாளமே தெரியாத நிலையில் அப்பகுதியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களின் வீடுகட்கு இழுத்துச் சென்று இவன் உனது மகனா? உனது மகனா? என தாய், தந்தை, சகோதரர்களிடம் கேட்டனர். (யாரென்பது புலிகளுக்குத் தெரியாமலல்ல. ஆனால், அனைத்து மக்களையும் பீதிக்குட்படுத்துவதே இதன் நோக்கமாகஇருந்தது.) முக அடையாளம் தெரியாததால் எல்லோருமே தமது பிள்ளையாக இருக்குமோ என கதறி அழுதனர். இறுதியில் அவர்களை தெருவில் சுட்டுக் கொன்று போட்டனர்.

வன்னியில் ஒரு தோழர் சித்திரவதை செய்யப்பட்டு இறுதியில் அவர் கையாலேயே சவக்கிடங்கு வெட்ட வைக்கப்பட்டு அதற்குள் அவரைக் கிடத்தி சுடுவதற்கு மிரட்டினர். அந்நேரம் இலங்கைப் போர் விமானம் அப்பகுதியில் குண்டு போட அனைவரும் சிதறி ஓடியதால் அவரும் மயிரிழையில் தப்பினார்.

யாழ்ப்பாணம் கந்தன்கருணைப் படுகொலையின் கொடூரம் ஹிட்லரின் விஷவாயுக் கொலைக்கு ஒப்பானது. அறைக்குள் அடைக்கப்பட்டிருந்த ஏனைய இயக்கப் போராளிகள் 58 பேர் கொலைஞன் அருணா என்பவனின் தன்னியக்கத் துப்பாக்கியால் சில வினாடிகளில் சுட்டுத் தள்ளப்பட்டு அத்தனை உடல்களும் ஓர் கிணற்றில் போட்டு மூடப்பட்டது.

பெண்புலிகளும் தமது பங்கினை விட்டுவைக்கவில்லை. வன்னியில் அடைத்துவைக்கப்பட்டிருந்த ஓர் தோழரை, காவலுக்குநின்ற பெண்புலி துப்பாக்கி முனையில் அவரது ஆடைகளைக் களைய வைத்து, அவர் கிளர்ச்சியுறும் வண்ணம் அங்க சேட்டைகள் செய்து, அவரது ஆண்குறியைக் குறட்டினால் நசித்து, அவர் வேதனையில் அலறுவதை அந்தப் பெண்புலி ரசித்து வந்தார்.

மேற்சொன்னவை சில மாதிரிகள் மட்டுமே. இவைபோன்று பல்விதமாக ஏராளமான போராளிகள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர்; கொல்லப்பட்டனர்.



ஆயுதங்களைக் கையளித்ததால் அனைவரின் பாதுகாப்புக்கும் அமைதிப்படை உத்தரவாதம் செய்திருந்தும், அந்நேரத்தில் புலிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பார்வையாளர்களாகவே இருந்தனர்.

## அபத்தக் கோரிக்கையும் அநியாயச் சாவும்

இந்திய அமைதிப்படை வரவுடன், ஏனைய இயக்கங்கள் பகிரங்கமாக செயற்பட்டாலும், அவர்கள் முன்னரே ஓரளவு செயற்பட்டுக் கொண்டிருந்த வன்னி, கிழக்கு பகுதிகளிலேயே ஆரம்பத்தில் ஜனநாயக செயற்பாடுகளை ஆரம்பித்தனர்.

யாழ்குடாவில் புலிகள், ஏனைய இயக்கங்களின் ஆதரவாளர்களை வேட்டையாடி, நாடுகடத்தியிருந்தாலும், புலிகளின் இராணுவம் அங்கு மிக அதிகமாக இருந்ததாலும் புலிகளின் கொலைத் தாக்குதலுக்கு அஞ்சி ஆரம்பத்தில் இயக்கங்கள் அங்கு செல்லவில்லை.



இந்திய உயர்ஸ்தானிகர் தீட்சித் (Dixit) இடம் புலிகள் இடைக்கால அரசைத் தம்மிடமே தரவேண்டுமென அடம்பிடித்தனர்.

மட்டக்களப்பில் ஓர் படுகொலைத் தாக்குதல் மூலம் ஏனைய இயக்கங்களை ஆதரிக்கக் கூடாதென எச்சரித்த புலிகள், ஏனைய இயக்கங்கள் யாழ் வருவதற்கு முன்பே அங்குள்ள மக்கள் ஆதரவைத் தம்பக்கம் திருப்ப உறுதியாக ஏதாவது செய்தாக வேண்டுமென்ற ஓர் தவிப்பு நிலையில் இருந்தனர்.

இதேவேளை இடைக்கால அரசை உருவாக்குவது தொடர்பான பேச்சுக்களும், இந்திய உயர் ஸ்தானிகர் தீட்சித் (Dixit) உடன் நடைபெற்றுவந்தன. புலிகள்இடைக்கால அரசைத் தம்மிடமே தரவேண்டுமென அடம்பிடித்தனர். எனவே முதற் சுற்றில் முடிவெடுக்கப்படவில்லை.

முழு அதிகாரத்தையும் தம்மிடமே கொடுத்துவிட வேண்டும். அந்தளவிற்கு அவர்களுக்கு இம்சை கொடுப்பது என்றும், அதேவேளை தமக்கு மக்கள் ஆதரவு உண்டென்று காட்டவும் வேண்டிய இரண்டு குறிக்கோள்களை அடைய, மக்களை உணர்ச்சிவசப்படுத்தி மாயைக்குள் சிக்கவைக்கும் தந்திரோபாயமாக திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தினர்.

இதன்படி இந்திய அரசுக்கு ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

1. பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட அனைத்துக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.
2. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தவேண்டும். (குறிப்பாக திருமலை)
3. ஊர்காவல்படையிடமிருந்து ஆயுதங்களைக் களை.
4. தமிழர் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் இராணுவ பொலீஸ் முகாம்களை மூடு.
5. இடைக்கால நிர்வாக சபையை அமைக்க வேண்டும்.

மேற்கண்ட ஐந்து கோரிக்கைகளும், இனப்பிரச்சினைத் தீர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கட்டத்தில் முக்கியமானதா? வலுவுள்ளதா? அவசியமானதா? என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

சிங்களக் குடியேற்றம், பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியன எமது போராட்டத்தை வேகப்படுத்துவதில் பங்குவகித்த காரணிகள். சாதாரண போராட்ட வேளைகளில் இச்சுலோகங்கள் அவசியமானவை; வலுவுள்ளவை.

இராணுவ முகாம்கள், ஊர்காவல் படை என்பன இனப்போரின் விளைவாக உருவானவை. எனவே, தீர்வு காணும் பட்சத்தில் அதற்கு அவசியமில்லை. இடைக்கால நிர்வாகம் தீர்வை நடைமுறைப் படுத்தும் முதற்படி.

இந்திய இலங்கை உடன்பாடு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் திட்டம். இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில், வட-கிழக்கு மாகாண ஆட்சி மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமையிடமே வரும். ஆயுத ஒப்படைப்புடன் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்வதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதுடன், குழுக்குழுவாக கைதிகள் விடுதலை செய்யப்பட்டும் வந்தனர்.

இங்கு இந்தக் கோரிக்கையோ, சாகும்வரை உண்ணாவிரதமோ அவசியமாக இருக்கவில்லை. இந்தக் கோரிக்கைகளும், இதற்குச் சாகும்வரை உண்ணாவிரதமிருந்ததற்கும் ஒரே நோக்கம், புலிகள் உண்ணாவிரதம் இருந்ததால்தான் அரசாங்கம் மீதிப் பேரை விடுவித்தது என மக்களை நம்பவைத்து ஆதரவு தேடும் சில்லறைத்தனமான முயற்சியே தவிர, அந்நடவடிக்கைகள் அச்சூழ்நிலையில் அர்த்தமற்றதாகவே இருந்தது.

(அடுத்த இதழில் தொடரும்)

> போவது சரியான பாதையாக இல்லாத போது வேகமாக ஓடுவதால் என்ன பயன்?
> - ஜெர்மனியப் பழமொழி

படிப்பகம்

www.padippakam.com



அன்பின் ஆசிரியருக்கு,



# புலிகள் ஆட்சியில் யாழ்ப்பாணம்

1990ம் ஆண்டு பங்குனி மாதம் இந்திய அமைதி காக்கும் படை வட-கிழக்கை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, புலிகள் வடக்கில் அதிலும் முக்கியமாக குடாநாட்டில் தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்தினர்.

இந்திய அமைதி காக்கும் படை வெளியேறியபோது, புலிகளுக்கும் - பிரேமதாசா அரசுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை நடந்ததால், இராணுவம் புதிய முகாம்களை அமைக்கவில்லை. மாறாக, புலிகளின் கோரிக்கைக்கிணங்க பருத்தித்துறை, வல்வெட்டித்துறை முகாம்கள் விலக்கப்பட்டிருந்தன. இதனால், இராணுவம் முகாம்களில் இருக்க, புலிகள் ஏனைய இடங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

மட்டக்களப்பில் சரணடைந்த சிங்களப் பொலீசாரை ஆயிரக்கணக்கில் புலிகள் சுட்டுத் தள்ளியதால், புலிகளிடம் இருந்து கிழக்கை மீட்க வேண்டிய தேவை பிரேமதாசா அரசுக்கு ஏற்பட்டது. இதனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலிகளுடன் நேரடி மோதல்கள் ஏற்பட, கிழக்கு மாகாணப் புலிகள் அனைவரும் பின்வாங்கி யாழ்தான் சென்றார்கள்.




இதன்பின்னர் ரிவிரச-I, ரிவிரச-II வரையில் புலிகளே யாழ்ப்பாணத்தின் தேர்ந்தெடுக்கப்படாத ஆட்சியாளர்களாக இருந்தார்கள். பின்னர் 1995ல் இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்ற, புலிகள் அங்கிருந்து பின்வாங்கி வன்னிக்குள் சென்றார்கள்.

இந்திய இராணுவம் வட-கிழக்கில் நிலைகொண்டிருக்கும்பொழுது யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இருந்தது; தொலைபேசி வசதி இருந்தது; வடக்கிற்கும் தெற்கிற்கும் போக்குவரத்து இருந்தது; முக்கியமாக காங்கேசன்துறையில் இருந்து நாளாந்தம் புகையிரதப் போக்குவரத்தும், பஸ் போக்குவரத்துக்களும் தாராளமாக இருந்தன. வங்கிகள், பாடசாலைகள் மற்றும் நிர்வாகங்கள் யாவும் திறம்பட இயங்கின.

புலிகளின் ஐந்தாண்டுகள் ஆட்சியில், மின்சாரம், தொலைபேசி முற்றாகத் துண்டிக்கப்பட்டது. புலிகள் மாத்திரமே ஜெனரேட்டர் வைத்து தமக்கு தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டனர். புகையிரத தண்டவாளம், அங்கு போட்டிருந்த சிலிப்பர் கட்டைகள், கல்லுகள் முதலியன முற்றாக அகற்றப்பட்டன. இன்று அவ்விடங்கள் பற்றைகள் மூடிப் பாழடைந்த பிரதேசமாக உள்ளது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோட்டை உடைக்கப்பட்டு சீரழிந்துள்ளது. யாழ் நகரத்தின் பெரும் பகுதி யுத்தத்தினால் சேதமாக்கப்பட்டது.

புலிகள் வைத்ததே சட்டமாக இருந்தது. புலிகள் ஸ்தாபித்த பொலீஸ், நீதிமன்றம் யாவும் புலிகளின் சொற்படியே ஆடியது. 18,20 வயது சிறார்கள் நீதிவான்களாக கடமையாற்றினர். நீதி என்பது என்ன விலை எனக் கேட்கும் நிலைமை. மக்களைப் போராட்டத்துக்குத் தயார்ப்படுத்துவதாகக் கருதி, மக்களின் முழுஉரிமைகளும் பறிக்கப்பட்டன.

பேசுவது, எழுதுவது என்பது யாரும் நினைத்துப்பார்க்க முடியாதது. அதுமாத்திரமல்ல, புலிகளின் பாட்டுகள், புலிகளின் படங்கள் தவிர வேறு எதுவுமே கேட்க முடியாது. சினிமாத் தியேட்டர்கள் மூடப்பட்டன. தொலைக்காட்சி பார்ப்பது, ரேடியோ கேட்பது கூடத் தடைசெய்யப்பட்டது. இப்படிப்பட்ட மோசமான அடக்குமுறைக்குள் தான் மக்களது சீவியம் அமைந்திருந்தது.

முழுப் பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டது. போக்குவரத்து தொடக்கம் பனங்கள்ளு வியாபாரம் வரை எல்லாமே அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டது. கொழும்பில் இருந்து கல்வி அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, வீதி அபிவிருத்திக்கென போன பெருந்தொகையான பணம் புலிகளின் கஜானாவுக்கே சென்றன. இதனால் பாடசாலைகளோ வீதிகளோ அபிவிருத்தி செய்ய முடியவில்லை.

ஆயிரக்கணக்கில் இருந்த மீனவர்களின் பிளாஸ்ரிக் படகுகளும், இயந்திரங்களும் தற்கொலைத் தாக்குதலுக்காகவும், தமது தேவைக்காகவும் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. இன்று மீனவர்கள் கட்டுமரத்திலும், தெப்பத்திலும் மீன் பிடிக்கும் நிலைமை.

இதனைப்போன்றே விவசாயமும். விதைக்கும் நெல்லுக்கும் வரி. மிளகாய், புகையிலை, மரக்கறி வகைகள் சகலவற்றிற்கும் வரி. முழு விவசாயமும் பாதிப்படைந்தது. இதனால் யாழ்ப்பாணத்துச் செம்மண் பிரதேச விவசாயிகள் தமது காணிபூமியை விட்டு அகதிகளாக வெளிநாடுகள் சென்றார்கள். இன்று, குடாநாட்டில் எத்தனை ஆயிரம் ஏக்கர் செய்கைபண்ணப்படாமல் உள்ளது!

1989 இலிருந்து 1990 வரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாகாண அரசை நடத்தியபோது, பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தியது. வட-கிழக்கின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய முயற்சித்தது. வட-கிழக்கின் போக்குவரத்தை சீர்படுத்தியது. அரச அலுவலகங்களில் இருந்த ஊழல்களைக் களைந்து சீரான நிர்வாகத்தை ஏற்படுத்தியது. சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தியது. வேலையற்ற தமிழ் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வழங்கியது....

இப்படி பல அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தினார்கள். இவையெல்லாம் புலிகளின் காலத்தில் சீர்குலைக்கப்பட்டன்.

இன்று குடாநாட்டுக்குத் தேவையான மின்சாரத்தில் ஐந்து வீதமே கிடைக்கிறது. யாழ் மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை போன்ற பகுதிகளுக்கு இரவு நேரத்தில் மாத்திரம் சிறிதளவான மின்சாரம் கிடைக்கின்றது.

ஐந்து லட்சம் மக்கள் இப்போது குடாநாட்டில் குடியேறியுள்ளார்கள். இவர்களுக்கு ஐந்து பொதுத் தொலைபேசியே பாவனையில் உண்டு. யாழ்ப்பாணத்துக்கும்-வெளியிடத்துக்குமான போக்குவரத்து முற்றாகவே சீர்குலைந்த நிலையிலேயே உள்ளது.

இறந்த மாவீரர்களுக்கு கல்லறைகளும் தூபிகளும் கட்டப்பட்டனவே தவிர, இங்கு வேறெதுவும் நடைபெற்றதாக இல்லை. மாறாக, சகல கட்டுமானங்களும் சீரழிக்கப்பட்ட நிலையிலேயே யாழ்ப்பாணம் உள்ளது.

இதற்கப்பால் இராணுவத்திற்கெதிராக யுத்தம் புரிகின்றோம் என்ற கருத்தில், தோட்டம் துரவென்றில்லாமல் சகல இடங்களிலுமே மனிதர்களின் உயிர்களைப் பறிக்கும் மிதிவெடிகள் (புலிகளால் தயாரிக்கப்பட்ட 'ஜொனி' மிதிவெடிகள்) தாராளமாகப் புதைக்கப்பட்டுள்ளன. இம்மிதிவெடிகளால் வாராந்தம் குறைந்தது இரண்டு பேர் இறந்தோ அல்லது கால்கைகளை இழந்தோ முடமாகின்றனர். யாழ் ஆஸ்பத்திரிக்கு இப்படியாக காயமுற்றோர் வந்தவண்ணமே உள்ளனர்.

இன்னும்கூட வீட்டைத் துப்புரவாக்கும் போதும், தோட்டத்தைக் கொத்தும் போதும் இப்படியான சம்பவங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. தோட்டத்திற்குள் காலை வைக்கக் கூசுகின்றது என்று சொல்லும் விவசாயிகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

அவ்வளவுதூரம் மிதிவெடிப் பயம் உள்ளது. மக்கள் மாத்திரமல்ல ஆடு மாடுகள் கதியும் அதோகதிதான். போராட்டத்தில் புலிகள் மக்களுக்காக விட்டுச் சென்றது இதைத்தான்.

புலிகள் தமிழீழத்திற்காகப் போராடுவதாக இன்னும் கூறுகின்றார்கள். இதற்காக வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் இன்னும் பாரியளவில் பணமும் திரட்டப்படுகின்றது. ஆனால் மக்களைப் பொறுத்தவரையில், வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிவிடுவோம் என்ற மனநிலையே அதிகமாயுள்ளது.

மிகவும் செழிப்பான யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களில் சனசஞ்சாரமே இல்லாமல் காடு சூழ்ந்து போயுள்ளது. எல்லோரும் எங்கே என்று கேட்டால், கிராமம் கிராமமாக கனடா, லண்டன், நோர்வே எனப் போய்விட்டதாகப் பதில் வருகிறது. மிச்சம் மீதியாக இருப்பவர்களும் போய்விடவே விரும்புகின்றார்கள்.

இன்றுள்ள சூழ்நிலையில், யாழ்ப்பாணத்திற்கும்-கொழும்பிற்கும் தரைவழிப் போக்குவரத்துக் கிடையாது. உணவுப் பொருட்கள், பயணம் எல்லாமே கடல்வழி மூலம் தான் நடைபெறுகின்றது.

இதனை நிறுத்தவும் புலிகள் முயற்சி செய்துவருகின்றார்கள். ஏற்கனவே போக்குவரத்திற்கான ஓர் கப்பல் எரிக்கப்பட்டு, உணவுக் கப்பல் ஒன்றும் இவர்களால் கடத்தப்பட்டது. இப்படியான சூழ்நிலையில், பொருட்களின் விலை பல மடங்கு அதிகரிப்பதுடன் அவசர காரியமான போக்குவரத்துகளும் தடைப்படுகின்றன.

இவைதவிர, மக்கள் நடமாட்டம் உள்ளஇடங்களிலேயே புலிகள்இராணுவத்துக்கோ, பொலீசுக்கோ கிரனைட் எறிகின்றார்கள். இதனால் ஏற்படும் மோதலில் அநியாயமாக அப்பாவிகள் இறப்பதும் வாடிக்கையாகி விடுகின்றது. இச்சூழ்நிலைகள் மக்களை, இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்ற மனோபாவத்திலேயே வைத்திருக்கிறது.

முன்னர், மக்கள் ஆதரவு தமக்குண்டு, அவர்களது ஆதரவு இல்லாமல் தாம் எப்படிப் பலமான அமைப்பாக இருக்கின்றோம் என பலப்பல கதைகள் கூறினார்கள். ஆனால், இன்று புலிகள் எங்கு நிற்கின்றார்களோ அவ்விடத்தைவிட்டு அகலவே மக்கள் விரும்புகின்றார்கள். நச்சு வாயு அடித்து விடுவார்கள் என மிரட்டப்பட்டு யாழ் மக்கள் 24 மணி நேரத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள்.

ஆனால், என்று சாவகச்சேரி கைப்பற்றப்பட்டதோ, அன்றே மக்கள் அனைவரும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள். அதேபோல் இன்றும் வன்னியில் இருந்து, அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வவுனியா, மன்னார், யாழ்ப்பாணத்திற்கு மக்கள் போனவண்ணமே உள்ளனர். இவை யாவும் மக்களுக்குள்ள மன விரக்தியையும், புலிகளின் மேல் உள்ள அதிருப்தியையுமே காட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் நடமாட்டத்தை இராணுவத்தினர் உடனடியாகவே மோப்பம் பிடித்து விடுகின்றனர். எவ்வாறு? புலிகளின் கடந்தகால நடவடிக்கைகளால் விரக்தியுற்ற மக்கள் கொஞ்சமாவது நிம்மதியாக வாழ விரும்புகின்றார்கள். இதன் பிரதிபலிப்புத்தான் இக் காட்டிக்கொடுப்புகள்.

"புலிகள், மண்ணை விட்டு எம்மை விரட்டும் போதுகூட, எம்மிடம் மண்மீட்பு நிதி கேட்டார்கள்" என ஓர் வயோதிபர் கூறினார். "தலைநிமிர்ந்து வாழ்ந்த எங்களை, எல்லோருக்கும் பயந்தவர்களாக கூனிக்குறுகி வாழ வைத்துவிட்டார்கள் இந்தப் பெடியள்" என்று மற்றுமொருவர் மனம் நொந்து சொன்னார்.

மொத்தத்தில் போராட்டம், சமுதாயம் எல்லாமே சீரழிந்து போய்விட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற வேதனைதான் எல்லோரிடமும்.

இவை எல்லாவற்றையும் நாம் மீளக் கட்டியமைக்க இரண்டு தசாப்தங்கள் சென்றாலும் முடியாது. எனவே புலிகள் இனியாவது யதார்த்த நிலையை உணர வேண்டும். முழு மக்களையும் பகைத்துக் கொண்டு, ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்த முடியாது.

மக்கள் நிம்மதியாக வாழ நாம் முதலில் அனுமதிக்க வேண்டும். அவர்களது அன்றாட அலுவல்கள், போக்குவரத்தை சீர்குலைக்காமல் இருக்க வேண்டும். அவர்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்ற



புலிகள் வைத்ததே சட்டமாக இருந்தது. புலிகள் ஸ்தாபித்த பொலீஸ், நீதிமன்றம் யாவும் புலிகளின் சொற்படியே ஆடியது. 18,20 வயது சிறார்கள் நீதிவான்களாக கடமையாற்றினர்.

படிப்பகம்

நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். இதன்மூலமே யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் வெளிநாடுகளுக்கு ஓடுவதைத் தடுக்கலாம் என்பதுடன், வெளியிடங்களில்உள்ளோரும் யாழ்ப்பாணம் வரலாம் என்ற நிலையையும் தோற்றுவிக்கலாம்.

இப்படியான சூழலில்தான் மக்கள் தமது உரிமைகளுக்காக துணிந்து குரல்கொடுக்க முன்வருவார்கள். அதற்கேற்ப மக்களுடன் இணைந்து போராட்ட வழிமுறைகளையும் மாற்ற முடியும். இல்லையேல், மக்களே இல்லாத மண்ணுக்காக வீரகாவியம் படைத்ததாகத் தான் வரலாறு எழுதும்.

*யாழ்ப்பாணத்திலிருந்து....*
*எஸ். கனகலிங்கம்*



ஐக்கியத்தை
தொலைத்தோம்!
வாழ்க்கையைத்
தொலைத்தோம்!
அடுத்தவனை
நம்ப முடியாத
வர்களானோம்!
அஞ்சுவதும்
அடிபணிவதும்
அல்லால்
போராட்டத்தில்
எஞ்சியது
என்ன
கண்டோம்?

*அன்பின் ஆசிரியருக்கு,*

புலம்பெயர்ந்த நாடுகளில் தொடரும் தாக்குதல்கள்எதற்கு? ஏன்? யாரால் நடைபெறுகிறது?

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் மனநிலையைச் சற்று அறிந்துகொண்டால் இதற்கான விடையைக் கண்டுகொள்ளலாம்.

ஈழத்தை விட்டு வெளியேறிய முழுப்பேருமே அகதிகள் என்று சொல்லமுடியாது. ஈழத்தில் வாழ தனிநபர்களுக்குப் பாதுகாப்பின்மையைக் காட்டித் தம் பொருளாதார மேம்பாட்டுக்கு வெளியேறிய அகதிகளே அதிகம். இவர்களை அரசியல் அகதிகள் என்பதைவிட பொருளாதார அகதிகள் என்பதே சரி.

அகதிகள் என்ற உணர்வே இல்லாது, தாங்கள் வெள்ளைக்கார நாடுகளால் விருந்து வைத்து அழைக்கப்பட்டவர்கள் என்ற நினைப்பே இவர்கள் மனதில் ஓடுகிறது.

எவரைச் சந்தித்தாலும் பிரச்சினை என்பார்கள். ஊரில் தங்கச்சி கல்யாணத்திற்கு நிற்பாள். பணம் கேட்டு அலறும் ரெலிஃபோன் மணிச் சத்தங்களுக்கிடையில், போராட்ட நிதி கேட்டுக்கொண்டும் ஆட்கள்.

சிறுபிராயத்திலேயே இங்கு வந்துவிட்டவர்கள், அம்மா அப்பா கண்டிப்பில்லாத வாழ்க்கையில் உழைப்பதும் கிடைத்த பணத்தில் குடிப்பதுமாக விரக்திச் சீவியம். கார்களைக் கடனுக்கு வாங்கி அவதிப்படுவதும், வயுதுக் கோளாறு ஓட்டங்களும் இங்கு சாதாரணம்.

அணமையில் ஜெர்மனியில், வருடாவருடம் நடைபெறும் தேவாலய பூசையில் பத்தாயிரத்துக்கு மேல் பக்தர்கள் கூடியிருந்த இடத்தில் கோஷ்டிச் சண்டை மூண்டது. தேவாலயம் என்றும் பாராமல் நம்மவர்கள் வாள்களால் பரஸ்பரம் வெட்டிக்கொண்டனர். தொலைக்காட்சி, வானொலியில் எல்லாம் இந்தச் சம்பவத்தை ஒலி–ஒளிபரப்பினார்கள். தமிழர்கள் என்றால் கொலைகாரர்கள் என்றும் இவர்களை நம்ப முடியாது என்றும் வெள்ளைக்காரர்களும் விளங்கிக்கொண்டு வருகிறார்கள்.

சண்டைகள் நானறிந்தவரை மூன்றுவிதமாக இங்கு வருகின்றன. ஒன்று, ஊர் அடிப்படையில் குழுக்கள் பிரிந்து அடிபடுதல். வியாபாரப் போட்டியில் கடை முதலாளிகள் ஆட்களை ஏவி அடிபோடுதல். இந்த முதலாளிகளுக்கு புலிகளே எஜமானர்கள். முதலாளிமாரின்விசேட அடியாட்களாக புலிகள் கச்சிதமாய்க் காரியத்தை முடிப்பார்கள். 'போராட்டநிதி'யையும் வசூலித்து விடுவார்கள்.

மூன்று, புலிகளுக்கேயுரிய அரசியலான படுகொலைகள். இயக்கங்களைத் தடைசெய்யும் அவர்களது விசேடக்குறிக்கோள் உலகெங்கும் கிளைகளைக் கொண்டிருக்கிறது. கெரில்லா பாணி தாக்குதல்களை அவர்கள் இங்கும் திறம்பட நடத்துகிறார்கள். பாவம்! அவர்கள் பாய்ச்சல் நடத்த சிங்கள இராணுவம் மருந்துக்கும் இங்கு இல்லை என்பதால், சக இயக்கத்தவர்களும் நிதி தர மறுப்பவர்களும் தான் அவர்களுக்கு வேட்டை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் பிரான்ஸ் கிளை பொறுப்பாளர் லோகராஜாவை அச்சகத்தில் வைத்துத் தாக்கி அவரது உடமைகளைப் பறித்துச் சென்றார்கள்.

தொழிலாளர் பாதை உறுப்பினர்களை பாரிஸில் உள்ள லாசப்பலில் செயின்கள் பொல்லுகள் சகிதம் வந்து தாக்கினார்கள்.

புலிகளுக்கு எதிராகக் கதைத்த பலரை வெள்ளை வாகனத்தில் கடத்திச் சென்று எச்சரித்து விட்டிருக்கிறார்கள்.

எதிராக எழுதும் பத்திரிகைகள் எல்லாம் விற்பதற்கு தடை.


கடைகளில் கப்பம் வசூலிப்பது, கோயில் நிர்வாகங்களில் தலையிட்டு லாபப் பணத்தைத் தரும்படி கேட்பது, மண்மீட்பு புனர்வாழ்வு நிதிகளைத் திரட்டி தங்கள் தங்கள் பெயரில் கடைகளைத் திறந்துவைத்துக் கொள்வது, சங்கீத வகுப்பறைகள் நடத்துபவர்களிடம் தலைவரின் நாமத்தைப் பாடுமாறு மிரட்டுவது....

இப்படியாக புலம்பெயர்ந்த நம் வீரத் தமிழர்களின் நடத்தைகளை கதைகதையாய் நிறைய எழுதலாம். இக்கடிதத்தை ஜெர்மனியில் இருந்து பிரான்ஸ் நோக்கி வரும் ரயிலில் இருந்து எழுதுகிறேன். இந்தப் பெட்டிக்குள் எத்தனயோ நாட்டு வெள்ளைக்காரர் தங்களுக்குள் அமைதியாகவும் சந்தோசமாகவும் கதைக்கிறார்கள்.

இதற்குள்ளேயே எம்மினத்தார் இருவர் பயணம் செய்ய நேர்ந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். அவன் எந்த இயக்கமோ என்று யோசித்துக் கொண்டே பேசாமல் இறங்கிப் போய்விட நேரும். என் இனத்தவனிலேயே நம்பிக்கை கொள்ள முடியாதவனாக நான் ஆக்கப்பட்டிருக்கிறேன். எவனும் என்னை துப்பாக்கி முனையில் நிதி கேட்கக்கூடும்.

*அன்ரனி,*
*பிரான்ஸ்.*

# குறுக்கெழுத்துப் போட்டி-34



## இடமிருந்து வலம்

1. அகாலமாய் இறந்துபோன அரசிளங்குமரி.
3. பொன் கிடைத்தாலும் இது கிடைக்காதென்பர். நாள்களிலொன்று.
5. வார்த்தைகளால் பா நெய்பவன் அல்லது வாலொடு மரங்களில் வாழவது.
7. நள்ளிரவு.
8. நதிகள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியானாலும் கடைசியில் சென்று சேருமிடம்.
9. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு இதைத்தான் சரிவரச் செய்ய வேண்டும்.
11. கீறுதல் அல்லது எழுதுதல்.
12. தினைப்புலம் காத்துநின்று, வேட்டையாட வந்த வேலனிடம் களவுபோன கள்ளி.
14. இயல்பு திரிந்த நிலை; அவலட்சணம்.
16. கங்கை முதல் இது வரை வென்று சக்கரவர்த்தியாக இருந்தவன் ராஜேந்திர சோழன் என்கிறது வரலாறு.
18. மலைக்கு நேரெதிர்.
19. 'பாடு' சேர்த்தால் உண்ணலாம்.
20. வேகம், கவனம் ஆகியவற்றுடன் கூடிய தீவிரம், ஒன்றைச் செய்வதிலுள்ள முனைப்பு. (தலைகீழ்)
22. புதராகப் படர்ந்து வளரும் நீண்ட மடல் தாவரம்.
23. பார்த்தவுடன் படையும் நடுங்கும் பிராணிக்கு கடைசி எழுத்தில்லை. (தலைகீழ்)
25. ஊசிக்கும் இது உண்டுதான். ஆனால் நமக்குள்ளது போல் அதற்குக் கேட்காது.
26. பயிர்கள் வளர இது வேண்டும்; உலகில் வெற்றிபெற நம் உள்ளத்திலும் இது வேண்டும். (தலைகீழ்)
27. அடுத்தது காட்டும் இதைப் போல நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் என்கிறார் வள்ளுவர்.
29. தவிப்பையும் மெழுகையும் நினைத்தால் இதுவும் கூட நினைவுக்கு வந்துவிடும். (குழம்பி)
30. தேவலோக மங்கை.
31. கொத்தாகப் பூத்திருக்கும் மஞ்சள்நிற மலர், கொன்றை அல்ல.

## மேலிருந்து கீழ்

2. பயணம்.
3. கரு மேக மூட்டம். இது குழம்பியதில் வியப்பில்லை.
4. திருமலை மாவட்டத்தில் ஓர் ஊர்.
5. இறைவன்.
6. சேரனின் கொடியில் உள்ளது; சேயிழையின் முகத்திலும் உள்ளது.
7. சிறுமழை அல்லது மலைச்சரிவு.
8. அகந்தை.
9. ஏழு ஸ்வரங்களையும் ஒலி அளவில் கூட்டிச் செல்லுதல் ஆரோகணம் எனின் இது குறைத்துச் செல்லுதல்.
10. பேச்சுவழக்கில் பெரும் இடைவெளி.
13. கடுமையாக வேலை செய்பவர். (தலைகீழ்)
15. அறிவுபூர்வமானதாக இல்லாமல் கடினத்தன்மையுடன் நடப்பது. (தலைகீழ்)
17. அலங்காரம். (தலைகீழ்)
19. சிறப்பில்லாதது.
21. ஒவ்வொருவரிடமும் உள்ளது. ஆனால் அவரவர்க்குத் தெரியாதது; மூட்டைக்கு வளைவது.
24. அயோத்தியில் இடித்தது இவர் மசூதி.
26. தேர். (தலைகீழ்)
28. காற்று. (தலைகீழ்)
29. குரங்குக்கு இருப்பது, குறும்புப் பையனைச் சொல்வது. (தலைகீழ்)

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி-33 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. தங்கத்துரை | 1. தரப்படுத்தல் |
| 5. தப்பு | 2. கற்பூரவாசனை |
| 7. திவசம் | 3. துதி |
| 9. பூரிப்பு | 4. அவரை |
| 12. அப்பிராணி | 5. தம்பி |
| 14. பகீரதன் | 6. புண்ணியம் |
| 15. குய(வன்) | 8. சப்பைக்கட்டு |
| 16. வால் | 10. கீரி |
| 17. சக்தி | 11. புதல்வன் |
| 19. சவரக்கத்தி | 13. ராகு |
| 21. தன்வினை | 17. சக்கரம் |
| 23. கட்டம் 24. கால் | 18. முடத்தி |
| 25. கரடுமுரடு | 20. திரவம் |
| 27. சன்மானம் | 22. விகாசம் |
| 30. வத(ம்) | 25. கனல் |
| 31. நெம்புகோல் | 26. உதடு |
| 32. பாரி | 28. புன் 29. மாகோ |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**பா. மயில்வாகனம்**
**முதலாம் குறுக்குத் தெரு,**
**வவுனியா.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. கு. சுபேஸ்கரன்,
   இல. 6, யாழ் வீதி, வவுனியா.
2. ச. இரட்ணகுமார்,
   கல்விக் கல்லூரி, மட்டக்களப்பு.
3. ப. சிந்துஜா,
   57, நெவில் வீதி, திருகோணமலை.
4. க. சின்னம்மா,
   323/6, அலுத் மாவத்த, கொழும்பு 15.
5. நா. சதீஸ்குமார்,
   சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை.
6. சி. உதயநிலா,
   பட்டித் தோட்டம், மன்னார்.
7. எஸ். நிர்மலாகாந்தி,
   கோவில்புதுக்குளம், வவுனியா.
8. செ. முகம்மது பிர்தௌஸ்,
   206/3, மத்திய வீதி, திருகோணமலை.

## அரசு-புலிகள் பேச்சு....

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் நீலன் திருச்செல்வம் எம்.பி. ஆக இருக்கும் அதே சமயம், பேராசிரியர் பீரிஸுடன் இணைந்து இத்தீர்வுத் திட்டத்தையும் உருவாக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளார். அப்படி இருக்கும்பொழுது கூட்டணியைப் பொறுத்தவரை இத்தீர்வுத்திட்டம் செழுமைப்படுத்தப்பட வேண்டும் என்ற தேவையே அவர்களுக்கு இருக்காது.

பாராளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களைக் கொண்ட ஈ.பி.டி.பி.ஐப் பொறுத்தவரை அரசை எதிர்த்தால் வருமானம் நின்றுவிடுமோ என்ற பயம் ஓர் பக்கம், இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கு தலைவராகி விடலாம் என்ற தளராத ஆசை மறுபக்கம்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளிடையில் ஐக்கியம் இல்லை என்பது இன்னோர் விடயம். இந்நிலையில், தீர்வுத் திட்டத்தை செழுமைப்படுத்த இவர்கள் முயற்சிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இந்த மாதம் தீர்வுத் திட்டம் அரசால் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டால், இவை எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள்தான் சொல்ல வேண்டும். அப்படி இல்லாமல் அரசு, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால், புலிகள் நேர்மையான உண்மையான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை தமிழ் மக்கள் புலிகளுக்கும் தெளிவாக உணர்த்த வேண்டும்.

இல்லையேல் இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது மாறி, தமிழினத்தின் இடப்பெயர்வும், தமிழினத்தின் அழிவும்தான் மிகுதியாக இருக்கும்.

www.padippakam.com



# தேவை–ஒரு சிந்தனை மாற்றம்



'கறந்த பால் மீண்டும் முலைக்கு ஏறாது', 'போன பொழுது ஆனை கட்டி இழுத்தாலும் திரும்ப வராது'.... தமிழ் மக்கள் மத்தியில் நீண்டகாலமாக புழக்கத்தில் இருந்துவரும் பொன்மொழிகள் இவை.

எனினும் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டியதும், தவறு விட்ட அல்லது தவற விட்ட தருணங்களை இனங்கண்டு எதிர்காலத்தைச் செப்பனிட வேண்டியதும் தவிர்க்க முடியாத தேவையாகும்.

முன்னர் எப்போதையும்விட மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் எல்லை கடந்து போய்விட்டன. ஒவ்வொரு குடும்பமும், ஏன் ஒவ்வொரு தனிமனிதரும் கூட ஏதோ ஒரு வகையிலான பாதிப்புக்கு–இழப்புக்கு உட்பட்டு கசப்பான அனுபவத்தைச் சுமந்து கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

அரசியல் உரிமைக்கான போராட்டம், ஏறத்தாழ அனைவரையும் அகதி வாழ்வுக்குள் தள்ளிவிட்டுள்ளது. மக்களின் வேதனைகள் சோகங்கள் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல், "போராட்டத்தில் சில பின்னடைவுகளைச் சந்தித்தாலும், முன்பைவிட உக்கிரமாகப் போர் புரிவோம்... செய்து முடிப்போம் அல்லது செத்து மடிவோம்...." என்று வீரம் பேசுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் விசனம்தான் மேலோங்கி வருகின்றது.

ஆபத்து நிறைந்த கிளாலிக் கடலை நீந்திக் கடந்து வன்னிப் பெருநிலப் பரப்புக்குச் சென்ற மக்கள் மீண்டும் குடாநாட்டுக்குத் திரும்பத் தொடங்கியிருப்பதன் அரசியல் உள்ளடக்கத்தை தமிழர் தலைமைகள், குறிப்பாக புலிகள் புரிந்துகொண்டாக வேண்டும்.

கடல்வழியாக குருநகர் இறங்குதுறைக்கும், பாதயாத்திரையாக உயிலங்குளம் பாதை வழியாகவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நாடி வரும் மக்களுக்கு செங்கம்பள வரவேற்பு கிட்டாத போதும், மக்களின் வருகை தொடர்ந்தும் ஏறுமுகமாக இருப்பது கண்டுகொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இத்தகைய அன்றாட நிகழ்ச்சிகளே கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டிய தேவையை உணர்த்துகின்றன.

## திருப்புமுனை

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள், ஈழத் தேசிய முன்னணியாக ஒருமைப்பட்டதும், அதன் விளைவாக சிறீலங்கா அரசு அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்த இறங்கி வந்ததும், தமிழர் பிரதேசத்தில் குறிப்பாக குடாநாட்டில் படையினர் முகாம்களுக்குள் முடக்கப்பட்டதும் வரலாறாகிப் போக.... போராட்ட அரங்கின் தலைமைப் பாத்திரம் புலிகளுக்கு வாய்த்தது.

இதற்குப் பின்னர் இடம்பெற்ற போராட்டச் செயற்பாடுகளின் போதும், அரசியல் பேச்சுவார்த்தைகளின் போதும் விடுதலைப் புலிகள் ஏனைய அரசியல் சக்திகளைப் புறந்தள்ளி வைப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்தினர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கவனம் காட்டப்பட்டதை விடவும், மாற்று அரசியல் சக்திகளை வலுவிழக்கச் செய்து, ஒரே பிரதிநிதிகள் என்ற தகுதியை தக்கவைத்துக் கொள்வதற்கே விடுதலைப் புலிகள் முக்கியத்துவம் கொடுத்திருந்தனர்.

எந்தப் பேச்சுவார்த்தைகளின் போதும், தமிழ் மக்களின் அடிப்படைஅரசியல் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்து விடவில்லை; விலைபோய் விடவில்லை; போராட்ட நலன்களைக் காட்டிக் கொடுத்து விடவில்லை.... என்றெல்லாம் புலிகள் வீரம் பேசக் கூடும்.

எனினும் போர்முனையில் வீரத்துடனும், அர்ப்பணிப்புடனும் நடந்துகொள்ளுமளவுக்கு அரசியலரங்கில் விவேகத்துடன் விடுதலைப் புலிகள் நடந்துகொள்ளவில்லை என்பதே கடந்த பத்தாண்டு கால அனுபவங்களின் படிப்பினையாக எஞ்சுவது மறுக்க முடியாதது.

விடுதலைப் புலிகள் விவேகத்துடன் செயற்படாமையே தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## பேச்சுவார்த்தைகளும் விடுதலைப் புலிகளும்

கடந்த பத்தாண்டுகளில் புலிகள் மிகவும் குறிப்பிடக்கூடிய முக்கியமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1987 இலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள்.... பிரேமதாசா அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள்.... சந்திரிகா அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள்....

ஆகிய இம்மூன்று பேச்சுவார்த்தைகளுக்கும் இடையில் காணக்கூடிய மிக முக்கியமான ஒரு அம்சம், பேச்சுக்கள் தோல்வியில் முடிவுற்று மோதல்களுக்கு இட்டுச் சென்றது என்பதுதான்.

ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் எப்படி முறிவடைந்தன என்பதை நுணுக்கமாக ஆராய்ந்தால், அடிப்படை அரசியல் கருத்துக்களில் காணப்பட்ட முரண்பாடு என்பதை விடவும், அன்றாட நிகழ்ச்சிகளின் விளைவாக எழுந்த உணர்ச்சிகரமான உந்துதல்கள் பேச்சுவார்த்தைகளை முறிவடையச் செய்தன என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

'விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்; அதுதான் நிரந்தரமான நீடித்த அமைதியைத் தரவல்லது' என்ற கருத்தோட்டம் சில தமிழ் அரசியல் தலைவர்களிடம் மட்டுமன்றி, ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி வட்டாரங்களிலும் காணப்படுகிறது.

ஆனால், அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு ஊடாக தீர்வு காண்பது என்பதை விடவும், இராணுவரீதியாகப் பலம்பெற்று அரசைத் தோற்கடிக்க வேண்டும் என்பதிலேயே விடுதலைப் புலிகள் முனைப்பாக உள்ளனர் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

போர் என்பது எப்போதும் ஒரு கை ஓசை அல்ல. போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கிடையிலும் பரஸ்பரம் சந்தேகங்களும் நம்பிக்கையீனங்களும் நிலவுவது தவிர்க்க முடியாததுதான். எனினும் அரசாங்க தரப்பை விடவும்– படையினரை விடவும், மக்களின் நலன் என்பதில் போராளிகள்தான் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும். சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் மேலதிக பளுவைச் சுமத்துவதை போராளிகள் தவிர்க்க வேண்டும். அப்போதுதான் போராட்டத்தின் நியாயத்தை உணரும் மக்களின் ஆதரவைத் தம் பக்கம் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

ஆனால், விடுதலைப் புலிகள் அவ்வாறு நடந்துகொள்வதாக இல்லை. மின்மாற்றிகளை இராணுவ இலக்குகளாக கருதித் தாக்குவதும், பொதுமக்களின் போக்குவரத்து மார்க்கங்களைச் சீர்குலைப்பதும், பொதுமக்கள் குடியிருப்புக்களைக் கணக்கிலெடுக்காமல் எறிகணைகளை வீசுவதும்.... இன்னும் இதுபோன்ற செயற்பாடுகள், பொதுமக்களின் நலனில் புலிகளுக்கு இருக்கும் அக்கறை எத்தகையது என்ற வினாவையே எழுப்புகின்றது.

## சந்திரிகா அரசும் போரும்

சிறீலங்காவில் திருமதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க தலைமையிலான அரசு பதவிக்கு வந்த பின்னர், விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகப் பலத்த பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர் என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாதது.

1995 ஏப்ரல் 19ல் போர்நிறுத்தம் முடிவுற்றமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்பதை அரசியலரங்கில் நிறுவிய விவேகத்திலும் சரி.... முகாம்களுக்குள் முடங்கியிருந்த இராணுவத்தினரை களத்திற்கு இறக்கிவிட்ட வீரத்திலும் சரி.... மெதுவாக ஆனால் உறுதியாக மேற்கொள்ளப்படும் இராணுவச் செயற்பாடுகளின் தந்திரோபாயங்களிலும் சரி.... சந்திரிகா அரசு முன்னைய அரசுகளை விடவும் வித்தியாசமானது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலோ, கொலன்னாவ எண்ணெய்க் குதம் மீதான தாக்குதலோ குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான படையினர் நடவடிக்கைகளைப் பாதித்து விடவில்லை. முன்னேறிப் பாய்ந்த படையினரை எதிர்கொண்ட 'புலிப் பாய்ச்சல்', 'சூரியப் பிரகாசத்'துக்கு முன்பாக தாக்குப் பிடிக்க முடியவில்லை. முல்லைத்தீவு முகாமைத் தாக்கியழித்த 'ஓயாத அலைக'ளால் கிளிநொச்சி வரை நகர்ந்த 'உண்மை வெற்றி'க்கு அணை போட முடியவில்லை.

குடாநாட்டைப் படையினர் கைப்பற்ற முடியாது, கைப்பற்றினாலும் தக்கவைத்துக் கொள்ள முடியாது என்று பரவலாக நிலவிய எண்ணம் மாயையானது என்பது நிரூபிக்கப்பட்டதால்தான் 'வெற்றி நிச்சயம்' என்ற முழக்கம் மேலெழுந்தது. 'செய் அல்லது செத்துமடி' என்ற முயற்சி பாறாங்கல்லுடன் தலையை மோதும் எத்தனமாகவே இதுவரை இருந்து வருகிறது.

போர்முனையில் விடுதலைப் புலிகளின் வெற்றிகள் என்பது நீர்க்குமிழிகளாகப் போக, போருக்குள் சிக்குண்டு நசிபடும் மக்களின் அவலமும் கண்ணீரும் கூக்குரலும்தான் மேலோங்குகின்றன.

## கடந்த கால அனுபவங்கள்

வடமராட்சியில் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கைகளை முடமாக்கச் செய்வதில், மில்லரின் நெல்லியடித் தாக்குதலை விடவும், புதுடில்லியில் நடத்தப்பட்ட அரசியல் பேச்சுக்களே முக்கியம் வகித்தன. ஒப்பரேஷன் பூமாலையில் ஆரம்பமாகி சூறாவளியாகச் சுழன்றடித்த இந்தியப் படையினரின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு பிரேமதாசா அரசுடனான பேச்சுவார்த்தைகளே வழிவகுத்தன. தமிழர் பிரதேசத்தில் தாக்கி அழிக்கப்பட்ட படை முகாம்களை விடவும் அரசியல் பேச்சுவார்த்தைகளால் அகற்றப்பட்ட இராணுவ முகாம்களே எண்ணிக்கையில் அதிகமானது.

கடந்தகாலத்தின் இந்த அனுபவங்களை செம்மையாக உள்வாங்கிக் கொண்டால், அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளம் போடுவது கடினமானதாக இருக்கப் போவதில்லை. அதில்லாமல், வரட்டுத்தனமான பிடிவாதத்தோடு முரட்டுத்தனமான போக்கைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தால், மக்கள் போராட்ட அரங்கிலிருந்து அந்நியப்பட்டுப் போவது தவிர்க்க முடியாதது.

சமர்களில் மட்டுமல்ல முழுப் போராட்டத்திலும் தோல்வி என்ற மனோநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுப் போக.... கடந்த காலத்தைப் பொற்காலம் என்று கருதும் நிலைக்கும் உட்பட்டு விடுவர்.

எனவேதான் இன்றைய நிலையில் அத்தியாவசிய தேவையாக இருப்பது ஒரு சிந்தனை மாற்றம் எனலாம். வீரம் செறிந்த போர் என்பதை விடவும், விவேகம் நிறைந்த செயற்பாடுகளே அவசியமாகிறது.

இந்த மாற்றம் ஏற்படாத நிலையில், புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்பது, கானல்நீர் தாகம் தீர்க்கும் என்று கருதுவதற்கு ஒப்பானதாகும். புலிகளுடன் பேசித்தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணலாம் என்று எண்ணியிருப்பது, 'கடல் வத்தும் என்று காத்திருந்த கொக்கு குடல் வத்திச் செத்தது' என்பதைத்தான் நினைவுபடுத்துவதாக இருக்கும்.

– பா. கந்தசாமி



அரசியல் உரிமைக்கான போராட்டம், ஏறத்தாழ அனைவரையும் அகதி வாழ்வுக்குள் தள்ளிவிட்டுள்ளது. முன்னரெப்போதையும்விட எல்லை கடந்துவிட்ட துன்ப துயரங்கள்

**மக்களோடு தன்னை இணைத்துக் கொள்ளாத, மக்களின் பார்வையிலிருந்து பாராத எந்தச் செயல்திட்டமும் தோல்வி அடைகிறது.**

படிப்பகம்

## அன்பின் ஆசிரியருக்கு,

புதியகண்ணோட்டம் கடந்த இதழில் 'பேச்சளவில் ஐக்கியம் பிரயோசனம் இல்லை' என்ற கடிதத்தை வாசித்தேன். வியப்பும் மறுபக்கம் கவலையுமாக எழுந்தது.

தமிழ் மக்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதற்கான கூடிய பொறுப்பினை, தமது தலைமை நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காக ஏனைய கட்சிகளையும் தலைவர்களையும் முரட்டுத்தனமாக அழித்தொழித்த புலிகளே ஏற்க வேண்டும்.

மன்னார் அமரனின் கடிதத்தை வாசிக்கும்போது, புலிகள் இந்த மக்களுமேதான் காரணம். புலிகளை, அவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டியடிக்கும் காலம்வரை போற்றிப் புகழ்ந்ததும், பலர் வாய்மூடிகளாய் இருந்ததும் இன்றைய அவலங்களுக்குக் காரணம்தான்.

புலிகளே தஞ்சம் என யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய மக்களை புலிகளால் காப்பாற்ற முடியவில்லை என்றால், நாளைக்கு தமிழீழத்தை எடுத்தால் மக்களை வாழவைப்பார்களா இவர்கள் என்ற சந்தேகம் எல்லோர் மனதிலும் எழுந்துவிட்டது உண்மை.

இப்போதும் யாழ் குடாநாட்டில் நிம்மதியான வாழ்வைக் குழப்புவதில் புலிகள் தங்கள் பங்கை ஆற்றித்தான் வருகிறார்கள். பாடசாலை மாணவர்கள் போல் வந்து பாடசாலைகளுக்கு அருகிலேயே கண்ணிவெடிகளை வைப்பதும், எறிகுண்டுகளை வீசுவதுமாய் தொல்லை கொடுத்தே வருகிறார்கள்.

நாங்கள் கஷ்டப்பட்டுப் போராட, நீங்கள் சந்தோஷமாக இருக்கப் போகிறீர்களா என்றும் கேட்கிறார்கள். அவர்களுக்காக நாங்கள் (அதாவது பொதுமக்கள்) கஷ்டப்பட வேண்டும் என்பதுதான் கடைசியில் அவர்களது போராட்ட எதிர்பார்ப்பாகி விட்டது. தற்செயலாய் இவர்கள் தமிழீழம் பெற்றுவிட்டால் மக்களெல்லாம் அடிமைசாசனம் எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் இவர்கள் ஆட்சியின்கீழ் இருக்க வேண்டியிருக்கும் என்பதை நினைத்தால் கவலைப்படாமல் என்ன செய்ய?

## யாருக்காக போராட்டம்?

எது செய்தாலும் சரி என்று இசைபாடும் வயலின்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பது தெரிந்தது. உண்மையில் தமிழ் மக்களின் அபிலாசையை வென்றெடுக்கத்தான் இப்போது சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்களா என்பதை இவர்கள் நெஞ்சில் கைவைத்துத்தான் கேட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எப்படியாயினும் யாழ் மக்களின் அவலத்திற்குப் பெருமளவு



யாழ்ப்பாணத்திலிருந்து பெயர் குறிப்பிட்டிராத வாசகர்.

### மன்னார் மக்களின் தொடர் அவலம்

01 ஆவணி 1997ம் திகதிய புதிய கண்ணோட்டம் பத்திரிகையில் மேற்படி தலைப்பில் தாங்கள் எழுதிய விடயம் தொடர்பாக சில விளக்கங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பின்வரும் பந்திகளில் உண்மை நிலை எடுத்துக்காட்டப்படவில்லை.

பந்தி -5 எடிபல ஒப்பரேஷன் நடந்து முடிந்த திகதி பெப்ரவரி மாதம் 20. குஞ்சுக்குளம் மக்கள் தனிப்பட்டுவிட்டார்களென்றும், அவர்கள் உணவின்றிக் கஷ்டப்படுகின்றார்களென்றும் கேள்விப்பட்டவுடனே நானும், மன்னார் உதவி அரசாங்க அதிபரும், மாவட்ட காணி ஆணையாளரும், சுகாதார வைத்திய அதிகாரியும் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களுடன் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை குஞ்சுக்குளத்திற்குச் சென்று உணவுப் பொருட்கள் வழங்கியதுடன், சுகாதார கிளினிக்கும் நடாத்திவிட்டு வந்தோம்.
அதன்பின்பு வாராந்த போக்குவரத்து, உணவு விநியோக நடவடிக்கைகள் நானாட்டான் உதவி அரசாங்க அதிபரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பந்தி -6 இடம்பெயர்ந்த அனைத்து மக்களுக்கும் ஐ.நா. அகதிகள் ஸ்தானிகர் (யு.என்.எச்.சி.ஆர்.) நிறுவத்தினதும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினதும் (ஐ.சி.ஆர்.சி) உதவியுடன் கூடாரங்கள், உணவு அல்லாத அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வாராந்த உலர் உணவு வழமைபோல வழங்கப்பட்டு வருகின்றது.

எத்தனையோ நெருக்கடிகள் மத்தியில் அரச அதிகாரிகளாகிய யாம் மக்களுக்குச் சேவையாற்றி வரும்போது, தாங்கள் பக்கபலமாக இருந்து ஆதரவு வழங்க வேண்டிய வேளையில், 'அதிகாரிகள் கண்திறக்க வேண்டும்' என கேலியாக எழுதியுள்ளது மிகவும் மனம் வருந்தத்தக்க விடயமாகும்.

எஸ்.எம். குருஸ்,
அரசாங்க அதிபர்,
மன்னார்.

# போலீஸ் விசாரணை

ஏர்னஸ்ட் லாடன்

மத்திய ஐரோப்பியக்காரர். செக் மொழியில் எழுதியவர். நாஸிக்களின் எதிரி.



"இப்போது நீ விரும்புவது ஏதாவது உண்டானால் சொல்லு" என்று சாக இருந்த வாலிபனைப் பார்த்து ஸ்டட்கார்ட் நகரத்து ரகசியப்போலீஸ் மேல் அதிகாரி கேட்டான்.

எதிரே இருந்த ஒரு ஜன்னலை ஒரு சூனியப் பார்வையுடன் பார்த்துக் கொண்டு நின்றான் வாலிபன். ஜன்னலின் பலத்த இரும்புக் கம்பிகள் வானத்தை நீலச்செவ்வகங்களாக வெட்டிக் கொண்டிருந்தன. சிறைக்கு வெளியே ஒரு பழமரத்தில் பழங்கள் கம்பீரமாகப் பழுத்துத் தொங்கின. அங்கிருந்தால், பழங்கள் தித்திப்பாய் இருக்கும் என்று அவன் எண்ணினான்; அவைகளை நிறையத் தின்னலாம்; பழுத்துத் தானாகவே வாயில் வந்து விழும்; வயிறு புடைக்கத் தின்று திருப்தி அடையலாம். நான் ஏன் அகப்பட்டுக் கொண்டேன் என்று எண்ணினான் வாலிபன்.

"நான் சொல்கிறது புரியுதா உனக்கு?" என்று மறுபடியும் கேட்டான் போலீஸ் அதிகாரி. "இப்பொழுது நீ விரும்புவது ஏதாவது உண்டா?"

உண்டு. நான் விரும்புவது ஒன்று உண்டு என்று எண்ணினான் வாலிபன். இல்லை விரும்பாதது ஒன்று உண்டு. நான் மறுபடியும் சிறைப்பட விரும்பவில்லை. உன்னிடம் அடியும் உதையும் திட்டும் பட நான் விரும்பவில்லை. இல்லாவிட்டால் அந்த ஜன்னல் வழியாகத் தப்பி ஓட நான் முயற்சித்திருப்பேனா? நான் அதை விளையாட்டாகச் செய்தேன் என்று நினைக்கிறாயா நீ?

"நீ சாகுமுன் உன் தாயாரைப் பார்க்க விரும்புகிறாயா?"

தாயார் என்று தான் சொன்னான். அவன் அப்படிக் கேட்பானேன்? நான் சாகப் போகிறேன் என்று அவன் எனக்கு ஞாபகப்படுத்தவும் வேண்டுமா? அந்த மாதிரி அவன் என்னிடம் பேசுவது நல்லெண்ணத்துடனா? இல்லை, ஏதோ ஏமாற்று வித்தைதான்.... அவன் சாக மாட்டான். சௌக்கியமாக வீடு திரும்பிவிடுவான்,

ஆமாம், நான் இப்பொழுது என் தாயாரைப் பார்க்க விரும்புகிறேன். என் தாயாரைப் பற்றி அவன் நல்லெண்ணத்துடன் எனக்கு நன்மை செய்யும் எண்ணத்துடன் தான் ஞாபகப்படுத்தினானோ, என்னவோ?....

முகத்தில் எவ்விதமான பாவமும் இல்லாமல்அவன் போலீஸ் அதிகாரியைப் பார்த்துத் தலையை ஆட்டினான்.

"உன் தாயாருக்கு ஆள் அனுப்பியிருக்கிறேன். அவள் இன்னும் சற்று நேரத்துக்குள் வந்து விடுவாள். இன்னும் ஒரே ஒரு கேள்விக்குத்தான் நீ பதில் சொல்ல வேணும். உன்னிடம் அந்தப் பிரசுரங்களைக் கொடுத்தது யார்?...."

போலீஸ் அதிகாரி பதிலுக்குக் காத்திருந்தான்.

அப்படியா என்று எண்ணினான் வாலிபன். அந்தக் கேள்வியினால் அவன் வாயில் ஒரு கசப்புத் தோன்றிற்று. அசுசியாக இருந்தது.... வெறுப்பு.... அவன் கத்தாதிருப்பதற்காக ஒரு தரம் அவன் வாயில் ஏதோ ஒரு பந்தைத் திணித்தார்கள். இப்பொழுது அவன் பேச வேணும் என்று விரும்பினார்கள். தன் நண்பர்களைக் காட்டிக் கொடுக்க வேணும் என்று கேட்டார்கள், பல நாட்களாகப் போலீசார் அவன் நண்பர்களைத் தேடிக் கொண்டு அலைந்தார்கள். ஆட்களோ அவர்கள் இருந்த இடமோ அவர்களுக்குத் தெரியவில்லை. கசம் பிடித்த போலீஸ் அதிகாரிகள்.... கசம்....

"நான் ஒன்றும் சொல்லுவதாக இல்லை."

"உன் தாயாரை ஞாபகத்தில் வைத்துக்கொள்"

வாலிபன் மேற் கூரையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அதற்கப்புறம் அவன் நாலு மணி நேரம் உயிருடன் இருந்தான். நாலுமணி நேரத்தில் எவ்வளவோ கேள்வி கேட்கலாம்,

மூன்று நிமிஷத்துக்கு ஒரு கேள்வி கேட்பதாக வைத்துக் கொண்டாலும், நாலுமணி நேரத்தில் எண்பது கேள்விகள் கேட்கலாம். போலீஸ் அதிகாரி நல்ல அதிகாரி; அதாவது போலீஸ் முறைகளைச் சரியாக அறிந்தவன். இதற்கு முன் அவன் எவ்வளவோ பேர்வழிகளை விசாரணை செய்திருக்கிறான். சாக இருந்தவர்களையும் விசாரித்திருக்கிறான். என்ன செய்ய வேணும் என்று அறிந்திருக்க வேண்டும். கேள்விகள் கேட்பதில் திறமை வேண்டும் போலீஸ் அதிகாரியாக இருக்க. சிலரை அதட்டிக் கேட்க வேண்டும்; சிலரை ரகசியமாகக் கேட்க வேண்டும்; சிலரைப் பயமுறுத்த வேண்டும்; சிலரைக் கொஞ்ச வேண்டும்.

"உனக்கு நல்லதுக்குத்தான் சொல்லுகிறேன்" என்றான் போலீஸ் அதிகாரி. ஆனால் அந்த வாலிபன் காதில் இனி உரத்த கேள்விகளும் விழாது. மௌனமாகவே அவன் இறந்து விட்டான்.

மறுநாள் பத்திரிகைகளில் பின்வரும் அறிக்கை வெளிவந்தது:

"யாரோ அரசுக்கு விரோதமான பிரசுரங்கள் வைத்திருந்ததாகவும் அவற்றைப் பிறருக்கு வழங்கியதாகவும் 'ட' எனும் கூலி வேலை செய்யும் ஆசாமியை ஸ்டட்கார்ட் ரகசியப் போலீஸார் குற்றம் சாட்டிக் கைது செய்ய முயலும்போது அவன் மூன்றாவது மாடியிலிருந்து தன் ஜன்னல் வழியாகக் கீழே குதித்து விட்டான்.

வெளி முற்றத்தில் எலும்பு நொறுங்கி அவன் கிடந்ததைப் போலீஸார் கண்டனர்.

சில நாட்கள் போலீஸ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றும் குணமடையாமல் அவன் இறந்து விட்டான்.



## அன்னை தெரசாவின் காலை நேரப் பிரார்த்தனை!

இறைவா!
என்னை அமைதியின் வடிவாய் ஆக்கியருளும்;
பகையுள்ள இடத்தில் அன்பையும்
தவறுள்ள இடத்தில் மன்னிப்பையும்
பிளவுள்ள இடத்தில் ஒற்றுமையையும்
பிழையுள்ள இடத்தில் உண்மையையும்
ஐயமுள்ள இடத்தில் உறுதியையும்
விரக்தியுள்ள இடத்தில் நம்பிக்கையையும்
இருளுள்ள இடத்தில் ஒளியையும்
மருளுள்ள இடத்தில் மகிழ்ச்சியையும்
தருவாய் இறைவா!

www.padippakam.com



யாழ்ப்பாணத்திலிருந்து... விதுரன்



# புனர்நிர்மாணப் பணிகளை இலகுவாக்கவும், பல உடனடிப் பிரச்சினைகட்குப் பரிகாரம் காணவும் காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை இயங்க வேண்டும்.

யாழ் குடாநாட்டில் இயங்கிவந்த ஒருசில பாரிய தொழிற்சாலைகளில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையும் ஒன்றாகும். இன்று இத்தொழிற்சாலை உருக்குலைந்து செயலிழந்த நிலையில் காணப்படுகிறது.

1980க்கு முன்னர் சீமெந்துக் கூட்டுத்தாபனம் சிறப்பாக இயங்கிவந்த காலகட்டத்தில் இந்தத் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 350 தொடக்கம் 400 மெற்றிக் தொன் சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இயங்கிவந்த இரண்டு சீமெந்துத் தொழிற்சாலைகளும் நாட்டின் சீமெந்துத் தேவையின் கால்வாசிப் பங்கைப் பூர்த்தி செய்யப் போதுமானதாயிருந்தது. 1500 பேர் வரை நேரடித் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

சூறையாடப்பட்டும், இயக்கமின்மையால் பழுதடைந்தும் உருக்குலைந்துபோன இந்தத் தொழிற்சாலையை புனரமைப்பதன் மூலம் யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பல உடனடிப்பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணமுடியும்.

யாழ் குடாநாட்டில் 17,020 வீடுகள் முழுமையாக சேதமடைந்திருப்பதாகவும், 64,300 வீடுகள் பலத்த சேதமடைந்திருப்பதாகவும் யாழ் கச்சேரி உத்தியோகத்தர்களது கணக்கெடுப்பு ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

யாழ் குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துவரும் மக்கள் சேதமடைந்த வீடுகள் மற்றும் தொழில் நிலையங்களைப் புனரமைப்பதற்கு சீமெந்து பெருமளவு தேவையாய் உள்ளது. இப்போ இந்தத் தேவையின் ஒரு பகுதியே பூர்த்தி செய்யப்படுகிறது.

அத்துடன் யாழ் குடாநாட்டில் விநியோகிக்கப்படும் சீமெந்து, கப்பல் மூலம் எடுத்துவரப்படுவதனால் கொழும்பில் 310 ரூபாவுக்கு கிடைக்கும் ஒரு பை சீமெந்தினை யாழ்ப்பாணத்தில் 525 ரூபா கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

ஆக, யாழ் குடாநாட்டில் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு இவை பெரும் தடைகள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

சீமெந்துத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கி, சீமெந்து தடையின்றிக் கிடைக்குமாயின், புன்னாலைக்கட்டுவனிலுள்ள அஸ்பெஸ்டாஸ் கூரைத் தகடுகளை உற்பத்தி செய்யும் 'மஸ்கன்' தொழிற்சாலை இயங்குவதற்கான் வாய்ப்புகளும் அதிகரிக்கும். இந்த இரு தொழிற்சாலைகளினதும் இயக்கம் யாழ் குடாநாட்டின் புனர்நிர்மாணப்பணிகளுக்குப் பெரிதும் உதவும்.

மேலும் விவசாயம், மீன்பிடி போன்ற பிரதான தொழில்கள் முழுமையாக மேற்கொள்ளப்பட முடியாத நிலையில், சீமெந்துத் தொழிற்சாலையின் இயக்கம் பலருக்கு நேரடியகவும், இன்னும் பலருக்கு மறைமுகமாகவும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

ஏறத்தாழ 400 மில்லியன் ரூபா செலவில் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் ஒருபகுதியைப் புனரமைக்க முடியும் எனவும், அவ்வாறு புனரமைத்து இயங்க வைத்தால் முன்னர் இந்தத் தொழிற்சாலையில் இருந்து நாளொன்றில் பெறப்பட்டஅதேயளவு உற்பத்தியை ஆறு மாதங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சீமெந்துக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சாலையில் சேமிக்கப்பட்டிருக்கும் கிளிங்கரை (சுண்ணாம்புக்கல்லையும் களிமண்ணையும் அரைத்துப் பெறப்பட்ட கலவையை கடும் வெப்பத்தில் திண்மமாக்கி பெறப்பட்ட கட்டிகள்) பயன்படுத்தியே ஆறு மாதங்களுக்கு இவ்வாறு உற்பத்தியை மேற்கொள்ள முடியும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். அதன்பின்னர் வெளியே இருந்து கிளிங்கரை கொண்டுவந்து அரைத்து சீமெந்தைப் பெற்றுப் பொதி செய்ய முடியும் எனவும் கூறுகின்றனர்.

சுண்ணாம்புக் கல், களி ஆகியவற்றைப் பயன்படுத்தி சீமெந்து தயாரிப்பதற்கு உரிய வகையில் இந்தத் தொழிற்சாலையை முழுமையாக புனரமைப்பதற்கு 1200 மில்லியன் ரூபா செலவு ஆகும் என ஒரு மதிப்பீட்டின் மூலம் தெரிய வருகிறது.

அவ்வாறு புனரமைக்கப்படின் யாழ் குடாநாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டே சீமெந்து உற்பத்தி செய்யப்பட முடியும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

சீமெந்து உற்பத்திக்கு அவசியமான சுண்ணாம்புக் கல் யாழ் குடாநாட்டிற்குள்ளேயே தொழிற்சாலையைச் சூழவுள்ள பகுதிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டு வந்தது. மற்றொரு பிரதான மூலப் பொருளான களிமண் மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கனிலிருந்து கொண்டுவரப்பட்டது.

தற்போது போக்குவரத்தின்மை காரணமாக முருங்கனிலிருந்து களி கொண்டுவருவது சாத்தியமற்ற நிலையில், குடாநாட்டிற்குள்ளேயே அளவெட்டி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் களிமண்ணை அகழ்ந்தெடுக்க முடியும். ஏற்கனவே சிறிதுகாலம் இந்த இடங்களிலிருந்து களிமண்ணைப் பெற்று சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை முழுமையாகப் புனரமைக்கப்படும் பட்சத்தில், அங்குள்ள இரு 'ரேபைனர்கள்' மூலம் யாழ் குடாநாடு முழுவதற்கும் மின்சாரம் வழங்கப்பட முடியும். யாழ் குடாநாட்டுக்கான மின்விநியோகம், யாழ் குடாநாட்டு மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தினைக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

இதனைப் புரிந்துகொண்டதன் காரணமாகவே யாழ் பல்கலைக் கழக உபவேந்தர், குடாநாட்டில் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கும் மின்விநியோகம், வேலைவாய்ப்பு என்பவற்றை யாழ் குடாநாட்டு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து, அவற்றைப் பூர்த்தி செய்ய முடியாமல் அவதிப்படுவதோடு பெருமளவு நிதியை விரயம் செய்வதைக் காட்டிலும் இந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யப் பயன்படக் கூடிய காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை புனரமைத்து மீண்டும் இயங்க வைப்பது பயன் மிக்கதாகும்.

எனவே கண்துடைப்புக்காக புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்து உருப்படியான செயற்திட்டங்களை மேற்கொண்டு யாழ் குடாநாட்டு மக்களின் துயர்துடைக்க அரசாங்கம் முன்வர வேண்டும். செய்வார்களா?

இந்த நாட்டில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உண்மையான விருப்பம் அரசுக்கு இருக்குமானால், சாதாரண மக்களின் அவசர அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் காலம் தாழ்த்துவது அரசின் முயற்சிகளைப் பாழடித்து விடும்.

# ஒரே நாடு ஒரே மக்கள் என்பது ஒரே தரப்பிடமிருந்து வருவதல்ல

'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற கருத்து கேட்க நன்றாகத் தானிருக்கின்றது. ஆனால், இலங்கையின் இராணுவத்தினூடாக ஒரே நாடு ஒரே மக்கள் என்ற இலக்கை எய்த முடியுமா? நூறு வீதம் பௌத்த சிங்களவர்களைக் கொண்ட–மேலாதிக்க உணர்வு கொண்ட இராணுவம் ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கருத்தை எவ்வாறு விளங்கிக் கொள்ளும்?

இதனை இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம், என்னவென்றால், இந்த இராணுவத்தைக் கொண்டுதான் நாட்டின் இறைமையும் ஐக்கியமும் பாதுகாக்கப்படுவதாக எல்லா சிங்கள அரசியல்வாதிகளும், தலைவர்களும் கூறிவருகிறார்கள். இந்த இராணுவத்திற்குப் பெருமைக்குரிய வரலாறெதுவும் இருக்கிறதா என்பதனைப் பின்னர் பார்ப்போம்.

இனவாத அத்திவாரத்தில் தமது சிந்தனையைக் கூர்மைப் படுத்திய இன்றைய பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் பலரது நோக்கில், ஒரே நாடு என்பது பௌத்த சிங்கள நாடு என்பதும், ஒரே மக்கள் என்பது சிங்கள மக்களையும் குறிக்கிறது.

எந்தவித பிரச்சினையுமின்றி சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்கும் சிங்கள ஆணைக்குழு முன் இனவாத விசம் கக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் மத்தும பண்டார கூட அதற்கு முன்னால் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி முறையிட்டுள்ளார்.

மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணியோ இந்திய இலங்கை ஒப்பந்தம், தற்போதைய தீர்வுத்திட்ட யோசனைகளுக்கெதிராக நாடுமுழுவதும் சுவரொட்டிகளை ஒட்டி வருகிறது. ஜே.வி.பி. போன்றன தீர்வு யோசனைகளுக் கெதிராக பகிரங்கமாக ஈடுபட்டிருக்கின்றன. ஐ.தே.க. திரை மறைவில் செயற்பட்டு வருகிறது.

அரசு முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்ட யோசனையில் தமிழர் தரப்பின் அபிப்பிராயங்கள் எதுவுமே உள்ளடக்கப்படவில்லை. ஒருதலைப்பட்சமாக அதனை அமுல்படுத்த விளைகிறார்கள். இந்த அர்த்தத்தில், ஒரே நாடு ஒரே மக்கள் என்பது எவ்வளவு தூரம் நாட்டின் சகல இனங்களையும் குறிக்கும் என்பது கேள்விக்குரியதே. இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. அரசியல் ரீதியாக அவற்றுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறுவதுதான் நேர்மை.

ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கருத்து தமிழர் தரப்பு, சிங்களவர் தரப்பு, முஸ்லிம்கள் தரப்பு என சகல தரப்பினரதும் சுயாதீனமான ஐக்கியத்தின் மூலமே சாத்தியமாகும். இல்லாவிடில் அது வேறு வேறு அர்த்தங்களையும் பெறலாம்.

தமிழ் மக்களுடன் – அவர்களுடைய பிரதிநிதிகளுடன் பேசுவதன் மூலமும், தமிழர் உரிமைப் பிரச்சினையின் ஜீவாதாரமான விடயங்களில் திட்டவட்டமான தெளிவான முடிவுகளுக்கு வருவதன் மூலம் மாத்திரமே தீர்வுத்திட்ட யோசனைகள் செழுமை பெறமுடியும்; ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கருத்து அர்த்தம் பெற முடியும். தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் என்பது தமிழ்த் தரப்பினரை இணைத்துக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டியது. அல்லாமல் ஒருதரப்பினரால் மேற்கொள்ளப்படுவதல்ல.

அரசியல் தீர்வுத்திட்டமளவிற்கு தமிழ் மக்கள் இன்று நாளாந்தம் அனுபவிக்கும் துன்ப துயரங்களும் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும். தமிழ்க்கட்சிகளும் பாராமுகமாக இருக்க முடியாது. தங்கள் பொறுப்புணர்ச்சியைக் காட்டியாக வேண்டும். தற்போதைய தொய்வு நிலை, உணர்வற்ற நிலை நீக்கப்பட வேண்டும்.

விரும்பியோ விரும்பாமலோ பிரச்சினை சர்வதேசமயப்பட்டுள்ளது. தேசிய அளவில் இப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான முயற்சிகள் தற்போதைய அளவிற்குமேல் ஆக்கபூர்வமாகச் செல்லாது; சீரழியும் யுத்தக் கெடுபிடிகளும், அதிகரித்துச் செல்லும்; இனங்களிடையே உறவுக்கு பதிலாக விரிசல் அதிகமாகலாம். சர்வதேச மத்தியஸ்தம் பற்றி தீவிரமாக யோசிக்க வேண்டும்.

**– எஸ். திருநாவுக்கரசு**

வண்ணத்துப் பூச்சியை வதைக்காதவன்
குருவியைச் சுடாதவன்
நிலவை ரசிப்பவன்
ஆற்று நீரை அசிங்கப்படுத்தாதவன்
பூவைக் கிள்ளாதவன்
இவர்களும் கவிஞர்கள்தாம்.

– ஜெக.ராஜா

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22. வெளிவட்ட வீதி வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்